கழக வெளியீடு — ௨௭௨

வா.ட. ~~137~~ 135

# சுகுமாரி

(ஒரு நாடகம்)

4084X

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
...GANERI.

ஆசிரியர்:

ச. அய்யாசாமிப் பிள்ளை,

கோயம்புத்தூர்

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி 1940 சென்னை.

4084

கழக வெளியீடு—௨௭௨.

# சுகுமாரி

(ஒரு நாடகம்)

4084

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

கோவை அரசியல் உயர்நிலைப்பள்ளித்
தலைமைத் தமிழாசிரியர்,

ச. அய்யாசாமிபிள்ளை அவர்கள்
இயற்றியது.

PAGA
Y.M.C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

: : திருநெல்வேலி, தென்னிந்திய : :
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி : : சென்னை.

விக்கிரம—கார்த்திகை

[*Copy - Right*]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS.
DEC. 1940.

PRINTED BY THE JUPITER PRESS, G. T., MADRAS.

கோவை அரசியற் கல்லூரித் தலைமை ஆசிரியர் உயர்திருவாளர்

T. S. கிருட்டினமூர்த்தி ஐயர், M.A., L.T., அவர்கள்

# முகவுரை

கோவை அரசியற் கல்லூரி ஆண்டுவிழாக் கொண்டாட்டத்திற்காகத் திரு. ச. அய்யாசாமி பிள்ளையவர்களை ஒரு நாடகந் தயாரிக்கக் கேட்டுக்கொண்டேன். அவர் அங்ஙனமே 'சுகுமாரி' என்ற நாடகம் எழுதியுதவினார். இது பிரெஞ்சு மொழியில் மாலியேர் என்ற கவி இயற்றிய நாடகமொன்றின் மொழிபெயர்ப்பு. ஆனால் 'சுகுமாரி' வெறும் மொழிபெயர்ப்பு அன்று. தமிழர் நடை, உடை, பாவனைகளை அனுசரித்து முதனூலைத் திருத்தி இஃது எழுதப்பட்டது. மிகவுந் திறமையோடு நல்ல நடையி லமைக்கப்பட்டுளது. திரு. அய்யாசாமி பிள்ளையவர்கள் இதற்கு முன்பே பல நாடகங்கள் எழுதியிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததேயாம். இன்னும் சில நாடகங்கள் எழுதக் கருதியுள்ளார். அவைகளின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தமிழ் அன்பர்கள் இவ்வித முயற்சியை ஊக்கித் தமிழன்பு பாராட்டுமாறு கோருகிறேன்.

கோவை,
பிரமாதி ஆண்டு,
பங்குனி க

தி. ச. கிருட்டினமூர்த்தி,
தலைவர்,
அரசியற் கல்லூரி, கோவை.

# சுகுமாரி நாடக உறுப்பினர்

---

| | | |
|---|---|---|
| அஞ்சனாதேவி | ... | பாண்டிநாட்டு அரசி |
| சுகுமாரி | ... | அஞ்சனாதேவியின் புதல்வி |
| கோமதி | ... | சுகுமாரியின் தோழி |
| கண்ணகி | ... | காளிகோவில் தேவராட்டி |
| விஜயசேகரன் | ... | தொண்டைநாட் டிளவரசன் |
| உக்கிரசிம்மன் | ... | சோழநாட் டிளவரசன் |
| மனோகரன் | ... | பாண்டிநாட்டுச் சேனாபதி |
| கனகராஜன் | ... | பாண்டியரண்மனை நிமித்திகன் |
| தருமநாதன் | ... | கனகராஜன் மாணவன் |
| பரதன் | ... | பாண்டியரண்மனை விகடன் |
| குணாங்கன் | .... | அஞ்சனாதேவியின் மெய்காவலன் |
| குமரன்<br>நாகன்<br>பட்டிலிங்கம்<br>சாமண்ணன் | } ... | காளிகோவில் பூசாரிகள் |

**கதை நிகழ்விடம் :** மதுரைப்பதி யரண்மனையிலும் அதனை யடுத்த பூஞ்சோலையிலும்.

# சுகுமாரி

---

## அங்கம் க. களம் க

இடம் :—ஒரு பூஞ்சோலை
நடர் :—மனோகரன், பரதன்

[மனோகரன் ஆழ்ந்த எண்ணத்தில் நின்றுகொண்டிருத்தல்-பரதன் வருதல்.]

பர :—(மனோகரனைத் தூரத்திலிருந்து பார்த்துத் தனக்குள்) எதையோ நினைத்துக்கொண்டு நிற்கிறார்.

மனோ:—(தனக்குள்) இல்லை மனோகரா, இல்லை; உனக்கு வேறு ஒரு வழியும் இல்லை. உலகம் உயர்குலத்தில் மயங்கி இருக்கிறது. உனக்கோ அஃது இல்லை. ஆகையால் நீ விரும்பிய பொருளும் உனக்கில்லை. உலக வாழ்வும் உனக்கில்லை.

பர :—(தனக்குள்) ஏதோ விண்ணுலகத்திற்குப் பயணம் போலிருக்கிறதே!

மனோ :—(தனக்குள்) ஐயோ!

பர :—(தனக்குள் என்ன சங்கடம் இவருக்கு? இல்லை; இதில் என்னவோ இருக்கிறது. ஒரு வேளை நான் எண்ணியது சரியாகத்தான் இருக்குமோ!

மனோ :—(தனக்குள்) ஆ! என் அன்பே! என் இன்பக் கனியே! இந்த ஏழையை ஏன் உன் வசப்படுத்தினாய்!

பர :—(தனக்குள்) சரி சரி; தெரிந்தது. ஆம். அப்படித் தான் இருக்கும். (அருகிற் சென்று வெளிப்படையாய்) தங்கள் ஊழியன் பரதன்.

மனோ :—(சிறிது தயங்கி) பரதா! ஏன் இங்கு வந்தாய்?

பர :—ஐயனே, காளிதேவி திருவிழா வெகு தடபுடலாக நமது ஊரில் நடக்கிறது. இன்றைக்கு அம்மன் ஊர் வலம். நமது சின்ன ராணியைக் கலியாணம் செய்து கொள்ள வந்திருக்கிறார்களே இரண்டு இளவரசர் கள்; அடடா! என்ன அலங்காரம் செய்திருக்கிறார் கள்! போட்டிப் போட்டுக்கொண்டு பணத்தைச் செல வழித்து ஊருக்கே பெரிய விருந்து செய்யப்போகி றார்களாம். இளவரசியின் காதலை எப்படியாவது அடைய வேண்டுமென்று எவ்வளவு பாடுபடுகி றார்கள். என்னென்ன வேடிக்கை! என்னென்ன கேளிக்கை! இத்தனையும் விட்டுவிட்டு இங்கே வந்து ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறீரே, என்ன காரணம்?

மனோ :—பரதா, இந்த வேடிக்கைகளில் எனக்கு உள்ளபடி விருப்பமே இருப்பதில்லை.

பர :—உண்மைதான். முற்றத்துறந்த முனிவர்பிரான். எப் படி இவற்றில் விருப்ப முண்டாகும். ஐயனே, உமக்கு உற்சாகமில்லாமற் போனதற்குக் காரணங்கூட எனக் குத் தெரியும்.

மனோ :—என்ன தெரியும்?

பர:—ஐயனே, காதல் மணம் இந்தக் காடெல்லாம் வீசுகிறது. இங்கே இருப்பது நீரும் நானும் மட்டுந்தான்; வேறு யாரும் இல்லை. என்னிடமிருந்து காதல் மணம் கடுகள வும் வீசாது. எனக்கும் காதல் பைத்தியத்துக்கும் வெகு தூரம். அஃது என் ஜாதகத்திலுங்கூட இல்லை. என்

மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். அஃது உம்மிடத்தி லிருந்துதான் கம்மென்று வீசுகிறது.

மனோ :—அட, முட்டாளே!

பர :—சந்தேகமே இல்லை. இதைக் கேளும். என் மூக்குச் சுருக்கான மூக்கு. உண்மை தெரிந்துவிட்டது. வாய் மிரட்டால் என்னை ஏமாற்றவேண்டாம். அந்த அம் மாளைக்கூட அறிவேன்.

மனோ :—எந்த அம்மாள்! பரதா, ஆகாயக் கோட்டை கட்டாதே.

பர :—வீண் பேச்சு எதற்கு? என்னை இன்னும் அடிமுட்டாள் என்றே நினைத்திருக்கிறீர். நமது அரண்மனைச் சோதி டர் கனக ராஜ கவி ராஜ பண்டிதருக்குத்தான் சோதி டம் தெரியுமென்று நினைக்காதீர். எனக்கும் தெரியும் அந்த வித்தை. அவர் பழைய சுவடி பார்த்துக் கவடி போட்டுப் புளுகுவார். நான் கண்ணைப் பார்த்தே உண் மையைக் கக்கி விடுவேன். வேண்டு மென்றாலும் பாரும். இப்பொழுதே என் வித்தையைக் காட்டுகிறேன். அங்கேயே சற்று நேரம் நில்லும். (சிறிது நடந்து) கண்ணை நன்றாகத் திறந்து என்னைப் பாரும்...உம்... ீ யன்னாவுக்கு அப்புறம் என்ன எழுத்து?

மனோ :—சு.

பர :—ீ யன்னாவுக் கப்புறம்?

மனோ :—கு.

பர :—இரண்டையும் சேர்த்துச் சொல்லும்.

மனோ :—சு—கு.

பர :—ம ன்னாவுக் கப்புறம் என்ன எழுத்து?

மனோ :—மா.

பர :—மூன்றையுஞ் சேர்த்துச் சொல்லும்.

மனோ :—சு—கு—மா.

பர :—ரா வன்னுவுக் கப்புறம் என்ன எழுத்து ?

மனே :—ரி.

பர :—நான்கையும் மனேகரமாகக் கூட்டிக் கொள்ளும்.

மனே :—சு—கு—மா—ரி.

பர :—உம். அப்படியா சேதி! நீர் இளவரசியார் சுகுமாரி தேவியின்மேல் காதல் கொண்டிருக்கிறீர். என் சோதிடம் சரிதானு?

மனே :—சரிதான், பரதா. சரிதான். நான் ஒளிக்கவில்லை. இருப்பினும், பரதா, உன்னை ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை ஒருவரிடமும் சொல்லாதே. குறிப்பாக, இப்பொழுது பெயர் சொன்னுயே, மங்கையர் நாயகமாகிய நம் இளவரசியார்; அவர் காதில் மட்டும் எட்டவே கூடாது. நினைவிருக்கட்டும்.

பர :—எதற்காகப் பயப்படுகிறீர்? சண்டையில் மட்டும் சிங்கம் போலிருக்கிறீர். சுகுமாரி என்று பேரைச் சொல்லும் போதே இப்படி நடுங்குகிறீரே?

மனே :—பரதா, மண்ணுக்கும் பொன்னுக்கும் போர் செய்வது வேறு. அந்தப் போரில் தேவரே வரினும் மூவரே வரினும் என் உள்ளங் கலங்காது. ஆனுல் பெண்ணுடன் போர் புரிவது எளிதன்று. பரதா, நமது இளவரசியின் பேரழகும், பிறை நுதல் மேல் ஒளிரும் இரண்டு வேற் கண்களும், என் ஆற்றலகற்றி, உள்ளத்தைக் கிழித்து ஒடுங்க வைத்துவிட்டனவே.

பர :—வேடிக்கையா யிருக்கிறது. பெண்ணும், இவர் ஒடுங்கி விட்டாராம். ஐயனே, உமது கொள்கை அப்படி யிருக்கலாம். என் கொள்கையே வேறு; என்னைப்போல் கோழை ஒருவன் ஒரு கோலை எடுத்து வந்தாலும் போதும்; குடல் நடுங்கிக் குற்றுயிராய்க் கீழே விழுந்து விடுவேன். ஆனுல், தேவலோகத்திலுள்ள ஊர்வசி

ரம்பைகள் ஆயிரம் பேர் என் முன்னால் நின்று ஒரு நாளெல்லாம் திறுதிறுவென்று விழித்துக்கொண்டு நின்றாலும், இந்தப் பரதனைமட்டும் அசைக்க முடியாது, தெரியுமா? அஃதிருக்கட்டும், நீர் இதற்காக என்ன தான் செய்யப்போகிறீர்?

மனோ:—என்ன செய்வது! என் காதலைத் தெரிவிக்காமலே இறந்துபோகத் தீர்மானம்.

பர:—அப்படியா, மிகவும் மங்களமான தீர்மானந்தான்...... ஆனால் ஒன்று கேட்கிறேன். உமக்கு ஆசை யிருப்பது சின்ன ராணிக்கு எப்படித் தெரியுமையா? அந்த அம்மாளே வந்து, "என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்" என்று கழுத்தை நீட்ட வேண்டுமென்கிறீரா?

மனோ:—பரதா, என் நிலைமையைப் பார். நானோ ஒரு சேனைத் தலைவன். எனக்கும் இளவரசிக்கும் எப்படிப் பொருத்த முண்டாகும்? இளவரசியாரோ என்னிடத்தில் எவ்வளவோ கண்ணியமாக நடந்துகொள்ளுகிறார். அந்தக் கண்ணியத்தைத் தொலைத்துக்கொள்ள யான் இம்மியளவும் விரும்பவில்லை. ஒழுக்கங் குன்றினால் எதுவுங் குன்றும். மனமுங் குன்றும், மரியாதையும் குன்றும். தெரிந்துந் தேர்க் காலில் விழலாமா?

பர:—சரி, இருக்கட்டும். நான் சமயம் பார்த்து இளவரசியின் உள்ளத்தை அறிந்து வருகிறேன். (சிறிது தூரம் நடந்து, திரும்பி) நீர் அதற்குள் செத்துப்போக வேண்டாம். என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்.

மனோ:—பரதா! நினைவிருக்கட்டும், உன் கருணை மிகுதியால் என் காதலை அவரிடம் தெரிவித்துவிடாதே. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியப்போகிறது.

பர:—எல்லாம் எனக்குத் தெரியும். அஞ்ச வேண்டாம்.

(பரதன் போதல்; திரை விழுதல்)

## அங்கம் க. களம் உ

இடம் :—அரசி கொலுவிருக்கை மண்டபம்

நடர் :—அஞ்சனதேவி விஜயசேகரன்
மனோகரன் உக்கிரசிம்மன்
கனகராஜன் பரதன்
குணங்கன்

[அஞ்சனதேவி அரியாசனத்தில் வீற்றிருக்க, ஏனையோரும் மேல் வரிசைப்படி இருபுறமும் அமர்ந்திருக்கின்றனர். பரதன் குணங்கன் இருவரும் பக்கத்திற்கொருவராக நிற்கின்றனர்.]

அஞ் :—விஜயசேகரரே! உக்கிரசிம்மரே! யானும் என்னுடைய குடிகளும், உங்களிருவருடைய கொடைத் திறத்திற்கும் ஊக்கத்திற்கும் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். உங்களது பெரு முயற்சியால் காளி தேவி ஊர்வலம் இவ்வாண்டு நடைபெற்றதைப்போல் வேறு எவ்வாண்டும் நடைபெற்றதில்லை. அதன் பலன் உங்களுக்குக் கிடைக்கவே கிடைக்கும்.

விஜ :—எல்லாவற்றிற்கும் பேரரசியின் கருணையும் நல்லெண்ணமுந்தான் காரணம். காளி கோவில் அலங்காரத்தையும் அங்கு நடக்கப்போகும் அரும் பெருங் காட்சிகளையும் வந்து பார்த்துக் களிக்கவேண்டும் என்பது எனது ஆவல்.

பரதன்:—எல்லாம் சரிதான், அம்மணி. ஊர்வலம் பருப்பில்லாத கலியாணமாகப் போயிற்று, நம் இளவரசர்கள் செய்த இவ்வளவு ஆடம்பரமும் நம்முடைய இளவரசியாருக்காக; அவர்களே வரவில்லை. இளவரசர்களுக்குச் சொல்லி முடியாத வருத்தம். ஏன் தான் இவ்வளவு பாடுபட்டோம் என்று கூட இருக்கும்; பாவம்.

விஜ :—பரதன் சொல்லுவது உண்மையே.

உக் :—பரதன் சொல்லுவது உண்மையிலும் உண்மை.

அஞ் :—மனோகரரே, ஊர் வலத்தில் உம்மையுங் காண வில்லையே?

மனோ :—பேரரசியே! மன்னிக்கவேண்டும். தள்ள முடியாத தடையொன்று அடியேனைக் குறுக்கிட்டது. தேவிக்குத் தொண்டாற்றி அவள் திருவருளைப் பெறும் பேற்றை இழந்துபோக நேர்ந்ததைக் குறித்துப் பெரிதும் வருந்துகின்றேன்.

விஜ :—பேரரசியே, சிலர் இதுபோன்ற கொண்டாட்டங் களில் கலந்துகொள்வது தங்கள் மதிப்பிற்குக் குறை வென்று நினைப்பதுண்டு. அவர்களுள் மனோகாரும் ஒருவர்.

மனோ:—இளவரசே, உமது கொள்கை அப்படி யிருக்கலாம். தகுதியை எண்ணித் தருக்கி நிற்பவன் நானல்லன். பேரரசியே நேரிலிருந்து விழாவை நிறைவேற்றினர் என்றால் எம்போன்றவர் தருக்கியிருக்க நினைக்கவும் முடியுமோ?

விஜ :—அப்படியுஞ் சிலரிருக்கிறார்களா இல்லையா?

பர :—(தனியுரை) இப்படியுஞ் சிலரிருக்கிறார்கள்.

கன :—மற்றவரைப்பற்றி மாத்திரம் சொன்னானே, இவன் வந்தானா, கேளுங்கள்.

பர :—பேரரசியே, வந்திருந்தேன், வந்திருந்தேன். ஆனால் கூட்டத்திற்குள் வரவில்லை.

அஞ் :—ஏன் வரவில்லை?

பர :—நேற்று இரவு ஒரு கனாக் கண்டேன். ஒரு போத்தெருமை, தலையே இல்லை. ஒரு காட்டிலே என்னைச் சுற்றிச் சுற்றித் துரத்துகிறது. அதன் பின்னால் ஒரு குள்ள நரி, அதற்கு வால் மட்டும் இல்லை. அஃது எருமை

மேலே எட்டிக் குதித்து என் தலைமேலே ஏறி உட்கார்ந்துகொண்டது. இப்படிக் கனவு கண்டால் ஆளுக்கே ஆபத்து என்று நம்முடைய சோதிடர், கனகராஜ கவிராஜ பண்டிதர் சொல்லியிருக்கிறார். கூட்டத்திற்குள் வந்தால் கூட்டோடு கைலாயம் போக ஏதேனும் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சித் தூரத்திலேயே இருந்து பார்த்துக்கொண் டிருந்தேன்.

கன :—பரதனுக்கு என்னைப்பற்றிப் பேசாமற்போனால் உண்ட உணவு செரிப்பதில்லை.

பர :—உணவு செரிக்காமற் போவதில்லை, சோதிடரே, செரிப்பதற்கு உணவுதான் இல்லை. ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லி வைக்கிறீரே.

கன :—தங்கள் திருமுன்னர் யாரும் என்னவேண்டுமானாலும் பேசலாம்போ லிருக்கிறது. பெருந்தன்மை யுடையவர்கள் அற்பர்களிடத்தில் அவமானப்படுவது மிகவும் கொடுமை.

பர :—தாங்கள் கொடுத்த பட்டத்தை மரியாதையோடு ஏற்றுக்கொண்டேன்.

அஞ் :—சோதிடரே, இஃது என்ன மதியீனம்! ஏன் இப்படிச் சினந்துகொள்ளுகிறீர்?

பர :—பேரரசியே, மன்னிக்கவேண்டும். நம் சோதிடருடைய நிலைமைக்கு மிகவும் வருந்துகிறேன். இவருக்கோ தேவதையெல்லாம் கைவசம். அவைகள் அருளினால் இந்த உலகத்தையே ஒரு குடைக்கீழ், கொடியேற்றி ஆளலாம் இவர். அப்படி யிருக்க ஏன் இவர் இங்கு வந்து இந்த அரண்மனைக் காசுக்கு அடித்தண்டமிட்டு ஆலாப் பறக்க வேண்டும்? ஏன் என்போன்ற அற்பர்களால் அவமானப்பட வேண்டும்? அதையும் பொறுத்துக்கொண்டு ஏன் உயிரோடு இருக்கவேண்டும்?

அஞ் :—ஏன் இந்த விவாதம்! நிறுத்துங்கள். இளவரசர்களே நீங்கள் என் புதல்வி சுகுமாரியின் மனப்பான்மையைத் தெரிந்தீர்களா? உங்களில் யார் அவள் உள்ளத்தைக் கைப்பற்றியுள்ளீர்?

உக் :—உள்ளமாவது, கைப்பற்றவாவது. கல்லேனும் ஒரு காலத்தில் கரையும்போ லிருக்கிறது. தங்கள் புதல்வியின் கன்னெஞ்சங் கரைய வில்லையே. வந்த நாளிருந்து இந்த நாள் வரையில் எந்தெந்த வகையாலோ முயன்று பார்த்தாய்விட்டது. காதலருள்ளம் கவியில் ஈடுபட்டிருக்குமென்று என் காதலைக் கரும்பினும் இனிய கவி வரைந்து காட்டினேன். கனியினும் இன் சொல்லால் என் காதலைப் பிழிந்து காட்டினேன். கண்ட பலன், ஒன்றுமில்லை. வர வர வாய்ப்பேச்சுக்கும் பஞ்சமாகப் போயிற்று.

அஞ்:—ஆனுல், விஜயசேகரரே, நீர்தான் யோகசாலிபோலும்.

விஜ :—அம்மணி, யோகம், சகடயோகந்தான். எனக்கும் இளவரசியார் இன்னும் இசையவில்லை. நான் கவியும் எழுதவில்லை, கண்ணீரும் விடவில்லை. இனி என் காதல் முயற்சி கடுகளவுஞ் செல்லாது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். தங்கள் விருப்பப்படிதானே இளவரசியும் நடக்கவேண்டும். தாங்களே பார்த்து எங்களில் ஒருவரை ஏற்றுக்கொண்டால் என்ன?

அஞ் :—இளவரசர்களே, சுகுமாரியின் திருமணத்தில் யான் நுழைய வழியேயில்லை. திருமண உரிமையை அவளுக்கே கொடுத்துவிட்டேன். இளங்காளைகளே, சுகுமாரி இன்னும் ஓர் இளம்பெண் என்பதை மறந்தீர் போலும். பெண்களுக்குரிய நாணம் அவளை அடக்காதா? உங்களால் அவள் மனப்பான்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லை யென்றுல், வேறு வழியாகத்

தான் தெரிந்துகொள்ள வேண்டும். மனோகரரே, அந்தப் பொறுப்பை உமக்களித்தேன். இந்த இளவரசர்களில் எவர் பக்கம் அவளுள்ளம் சாய்ந்துள்ளது என்பதை அறிந்து வாரும்.

பர :—(தனியுரை) பழம் நழுவிப் பாலில் விழுந்தது, அவ்வளவுதான்.

மனோ:—மகாராணி சர்க்கார், என்னிலும் மேம்பட்டவர் எத்தனையோ பேர்கள் தங்கள் திருமுன்னர் இருக்க, ஒன்றுக்கும் பற்றாத என்னை இந்த நல்ல காரியத்தைச் செய்ய விடுப்பது பொருத்தமாகுமோ? அதைச் செய்யுந் திறனும் எனக்கில்லை; நான் அருகனும் அல்லன்; என் முயற்சி தங்களுக்குத் திருப்தியாகவும் இராது.

அஞ் :—மனோகரரே, உமது வாழ்வு போரளவில் மட்டும் இருப்பது நன்றன்று. அறிவும், ஆற்றலும், வினையும், விளக்கமும் உடைய நீர், இந்தக் காரியத்தில் உறுதியாக வெற்றிபெறுவீர். உமது இனிய குணத்தை என் புதல்வி பெரிதும் விரும்புவாள், போம்.

மனோ :—என்னினும் மேம்பட்டவர் வேறு யாரையேனும்......

அஞ் :—இல்லை, இல்லை. இஃது என் கட்டளை.

மனோ :—கட்டளை யென்றால் பணிந்து நடப்பது என் கடன். ஆனால் என் முயற்சி புகழுறாது என்பதை மட்டும் திருமுன்னர்த் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அஞ் :—ஏன் இந்தத் தளர்ச்சி. நீர் அடக்கமுள்ளவர்; நீர் எடுத்த காரியம் எதுவாயினும் திருத்தமாகவே முடியும். சுகுமாரியின் தனிமையை உணர்ந்து, அவளது இனிய மனப்பான்மையை நீரே தெரிந்துகொள்ளும். இந்த இளவரசர்களின் கவலையும் நீங்கும்.

பர :—மங்கல காரியத்துக்கு மறுப்புச் சொல்லக்கூடாது. (தனியுரை) வலியவரும் சீதேவியை வேண்டா மென்பது போலாகும். யாராவது கரும்பு தின்னக் கூலி கேட்பார்களோ?

(திரை விழுதல்)

---

## அங்கம் க. களம் ங.

இடம் :—அரண்மனைப் பூஞ்சோலை.

நடர்:—மனோகரன், விஜயசேகரன், உக்கிரசிம்மன், பரதன்.

(நால்வரும் நின்று பேசிக்கொண்டிருத்தல்)

விஜ :—மனோகரரே, உம்மைப்பற்றிப் பேரரசியார் புகழ்ந்து பேசியது மிகவும் பொருத்தமானது. அவ்வளவும் உமக்குத் தகும்.

உக் :—இளவரசியின் மனத்தை அறிந்துவர அரசியார் உம்மை அனுப்பியதைப்பற்றி எனக்கு உண்டான மகிழ்ச்சி கரை கடந்தது. நீர்தான் அதற்குத் தகுதியானவர்.

விஜ :—பேரரசியார் முன்னிலையில் உம்மைக் குறை கூறியதை மனத்தில் வைக்கக்கூடாது. உமது அருமை தெரியாது சொல்லிவிட்டேன்.

மனோ:—'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்பதன்றோ நமது திருமறை. யார் எதைச் சொன்னாலும் என்ன? பெருமையும் சிறுமையும் தான்தர வருமேயல்லாது, பிறர் தர வாரா என்பதுதான் என் முழு நம்பிக்கை.

விஜ :—எங்கள் உயிர் இப்பொழுது உமது கையிலேதான் இருக்கிறது.

பர :—(தனியுரை) யமன் கையிலேதான் இருக்கிறது.

உக் :—எங்களுக்குள் யாருக்கேனும் உதவி புரிவதென்றால் இதுதான் தக்க சமயம்.

பர :—ஆமாம். இவர்களுக்காக இளவரசியாரிடம் கொஞ்சம் பரிந்து பேச வேண்டும். நழுவவிடக் கூடாது.

விஜ :—என்னைப்பற்றியே பரிந்து பேசவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை.

பர :—அவர் அப்படித்தான் சொல்லுவார். சொல்லின் நுட்பந் தெரிந்து தங்களால் ஆன உதவி செய்தே தீர வேண்டும்; மறந்துவிடக்கூடாது.

உக் :—என்னைப்பற்றியே பரிந்து பேசவேண்டுமென்று நானும் வரவில்லை.

பர :—அப்படியானால் இரண்டுபேரைப் பற்றியும் பேசவேண்டாம். இவர்களுக்கு நிரம்ப மனவருத்தமா யிருக்கும்.

விஜ<br>உக் } அடடா, அப்படி யல்ல.

பர :—பின் எப்படி?

விஜ :—அவர் விருப்பப்படி செய்யட்டும்.

மனோ:—அரசிளங் குமாரர்களே, மகாராணியார் எனக்கிட்ட கட்டளையை நிறைவேற்ற வந்தவன் யான். இளவரசியாரின் உள்ளத்தை அறிவதுதான் என் வேலை. உங்களைப்பற்றிப் பரிந்துபேச எனக்குக் கட்டளையில்லை. மன்னிக்க வேண்டும். (போதல்)

விஜ :—பரதன் என்னுடைய நண்பனல்லவா? இளவரசியிடம் போகும்போ தெல்லாம் என்னை மாத்திரம் உயர்த்தியே பேசுவான்.

பர :—அரசே, அஃது என்னைப் பொறுத்தது. உங்களுக்குள் சண்டை வேண்டாம்.

விஜ :—பலித்தால், பரதா, உன்னைக் கவனித்துக்கொள்ளுவேன்.

உக் :—விஜய சேகரரே, ஏது பரதனிடம் உறவு வலுவாயிருக்கிறது? சரிப்படுத்தப் பார்க்கிறீரே. பரதன் என்னைக் கைவிட மாட்டான். எனக்கு முந்தியே வாக்களித்திருக்கிறான். (பரதனைக் கூட்டிக்கொண்டு சிறிது தூரம் நடத்தல்.)

பர :—அதற்கென்ன சந்தேகம்? அவர் ஏமாந்தே போகப் போகிறார். இருந்தாலும் அவர் காரியவாதி. உம்மைக் காட்டிலும் அவர் வெற்றியடைவது வெகு சுலபம்.

உக் :—பரதா, உன் உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார்.

பர :—பகட்டு வார்த்தையால் பை நிரம்பாது, அரசே. (திரும்பிப் பார்த்து) அதோ இளவரசியார் வருகிறார். நீங்கள் நழுவுங்கள். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[விஜயசேகரனும் உக்கிரசிம்மனும் சாடைகாட்டிக்கொண்டே போதல்; பரதன் ஒரு புறமாகத் திரும்பிப் பாடிக்கொண்டிருத்தல்; சுகுமாரி வருதல்.]

சுகு :—பரதா!

பர :—அம்மணி, இங்கேயா இருக்கிறீர்கள்!

சுகு :—வா, இங்கே. எங்குப் போயிருந்தாய்? நேற்றெல்லாங் காணவில்லையே?

பர: —மகாராணி சர்க்காருடன் காளியம்மன் திருவிழாவிற்குப் போயிருந்தேன். கூட்டமென்றால் சொல்லி முடியாது. எள்ளுப்போட்டால் எள்ளு விழாது.

சுகு :—அப்படியா!

பர :—திருவிழாவிற்கு அரசிளங்குமரர் விஜயசேகரரும் வந்திருந்தார்.

சுகு :—ஆனாலும், பரதா, நமது நந்தவனத்தின் அழகே அழகு! இஃது ஒரு சிறு பொழில். அதில் ஒரு சிற்றாறு

தெளிந்து ஊருகிறது. கரை நெடுகப் பசும் புல் தரை. நம்முடைய கண்ணும் மனமும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் இதைப் பார்க்க.

பர :—ஆம் அம்மணி......உக்கிரசிம்மரும் வந்திருந்தார்.

சுகு :—அந்தச் செய்குன்றைப் பார். இயற்கைக் குன்றைப் போலவே இன்பந் தருகின்றது. தன் உருவத்திற் கேற்ற குறுமரங்கள் குடைவிரித்தாற் போலத் தண்ணிழல் தந்து நிற்கின்றன. உண்மையில், துறவிகளும் விரும்பிப் பார்க்க வேண்டியதுதான்.

பர :—ஆம் அம்மணி, சஞ்சீவி மலையை அப்படியே பெயர்த்தெடுத்து வைத்ததைப்போலத்தான் இருக்கிறது. (தனியுரை) இராஜ குமாரிக்கு இராஜ குமாரர்களின் பேருங்கூடப் பிடிக்கவில்லைபோ லிருக்கிறது. ஒரு செய்தி வெளிப்பட்டது. இன்னும் ஒன்றிருக்கிறது. அதையும் தெரிந்துகொள்ளுகிறேன். (வெளிப்படையாய்) அம்மணி, திருவிழாவிற்கு நம்முடைய மனோகரரும் வந்திருந்தார்.

சுகு :—மனோகரர் வந்திருந்தாரா, பரதா? அவர் ஏன் ஊர்வலத்திற்கு வரவில்லையாம்?

பர :—ஏதோ மனம் அவருக்குச் சரியாய் இல்லையாம். எதையோ சொல்ல வாயெடுத்தார். ஆனால் நீங்கள் தான் முந்தியே சொல்லி யிருக்கிறீர்களே, இவர்கள் சொல்லுவதைக் காதில் போட்டுக்கொள்ள வேண்டாமென்று. அதனால், “நீர் சொல்லுவதைக் கேட்க நேரம் இல்லை” என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன்.

சுகு :—அட, முட்டாளே, மனோகரர் சொல்லுவதைக் கேட்க வேண்டாமென்று சொல்லவில்லையே. இந்த இராஜ குமாரர்களைக் குறித்துத்தானே சொன்னேன்.

பர :—முதலில் மாட்டேன் என்றேன். பிறகு கேட்டேன், கேட்டேன்.

சுகு :—அதுதான் புத்திசாலித்தனம்.

பர :—அம்மணி, நம் மனோகரர் வெகு மனோகரமாகத்தான் இருக்கிறார். தான் என்று தருக்கி நிற்பவரல்லர். பதட்டமான பேச்சில்லை. நடு நிலைமை யுடையவர். அவசரக் குடுக்கையும் இல்லை. ஆடம்பரமு மில்லை. உண்மையில் அவர் என்றால், என் உள்ளம் அப்படியே பூரித்துப் போகிறது. அம்மணி, நான் சொன்னதில் குற்றமொன்று மில்லையே?

சுகு :—குற்றமா! ஒரு தவறுமில்லை. பரதா, அவர் என்ன சொன்னா ரென்று சொல்லவில்லையே?

பர :—என்ன சொல்லுவது? அவர் சொன்னதை அவரே சொன்னால் தான் உருக்கமாக இருக்கும். ஆனாலும், அம்மணி, தங்களிடம் மாத்திரம் அவருக்கு யாருக்கு மில்லாத மதிப்புண்டு. மங்கையர் நாயகமென்றுதான் தங்களை எண்ணியிருக்கிறார். ஆகா, என்ன அழகாக வருணித்தார். வருணிக்கும்போது எத்தனை பெரு மூச்சு! எவ்வளவு முகமலர்ச்சி! இடை இடையே மனத் தளர்ச்சி!.........அம்மணி, கொஞ்சங் குறுக்குக் கேள்வி போட்டேன். பிறகுதான் அவர் மனோ வியா கூலத்திற்குக் காரணந் தெரிந்தது.

சுகு :—என்ன காரணம், பரதா?

பர :—அவர் காதல் கொண்டிருப்பதாக அவரே ஒப்புக்கொண் டார், அம்மணி.

சுகு :—என்ன, என்ன! காதல் கொண்டிருக்கிறாரா? ஆகா! எவ்வளவு தைரியம் அவருக்கு! என்ன ஆணவம் இருந்திருக்க வேண்டும்! அதை ஒருவரிடம் சொல்லத் துணிந்தது ஆணவத்திலும் ஆணவம்.

பர :—அம்மணி, ஏன் இவ்வளவு கோபம் ?

சுகு :—என்மேல் காதல்கொள்ள அவருக்கென்ன அவ்வளவு நெஞ்சழுத்தம் !

பர :—ஐயோ கடவுளே ! அம்மணி, அவர் உங்கள்மேல் காதல் கொள்ளவில்லையே.

சுகு :—என்மேல் இல்லையா ?

பர :—இல்லவே இல்லை. உங்கள் தோழி கோமதி தேவி யாரின்மேல்.

சுகு :—ஆனால் அவருக்கு என்மேல் காதல் இல்லையா ? அவள் என்ன அத்தனை அழகு ? அவருடைய பேரழகுக்கும் பெருமைக்கும் வேறொரு பெண் உலகில் கிடைக்கவில்லையா ?

பர :—ஆனாலும், அம்மணி, அவர் ஆசை உங்களால்தான் முடிவு பெற வேண்டுமாம்.

சுகு :—(கோபமாக) என்னாலா ? என்ன ?

பர :—இல்லை, அம்மணி, இல்லை. இது தங்களுக்குப் பிடிக்க வில்லைபோலிருக்கிறது !

சுகு :—இல்லை இல்லை, சொல்லு.

பர :—மனதிற்குப் பிடிக்கவில்லை யென்றால், சொல்லிவிடுங்கள்.........அம்மணி, ஒரு சின்ன சந்தேகம். குற்றமுள்ள மனந்தானே குறுகுறுக்கும்.

சுகு :—ஆம், அதற்கென்ன இப்பொழுது ?

பர :—மனோகாருக்குத் தோழிமேல் ஆசை. உங்கள்மேல் ஆசை இல்லை. அப்படி இருந்தும், அவர் உங்கள்மேல் காதலா யிருக்கிறார் என்று நீங்களே நினைத்துக் கொள்ளுகிறீர்களே, அதுதான் கொஞ்சம் சந்தேகமா யிருக்கிறது.

சுகு :—என்மேல் காதல் கொண்டதாக அவர் சொல்ல வில்லையே ?

பர :—அந்தக் கேள்விக்குத் திடீரென்று பதில்சொல்ல முடியாது. மனோகரர், தம்முடைய மனதிலிருப்பது யாருக்கும் தெரியாதென்று நினைத்துக்கொண் டிருந்தார். அவரோடு பேச்சுக் கொடுத்துக் கொஞ்சம் நெருக்கிப் பிடித்தேன். உண்மை வெளிவந்துவிட்டது.

சுகு :—அந்த உண்மை என்ன ?

பர :—தோழி கோமதியை அவர் விரும்புவது உங்களுக்குப் பிடிக்கவில்லையே ?

சுகு :—சிறிதும் பிடிக்கவில்லை. அவர் அருமை பெருமைக்கு ஆயிரம் அரசிளம் பெண்கள் கிடைப்பார்களே !

பர :—உங்கள் கருத்தை அவர் முழுதும் ஒப்புக்கொள்ளுகிறார்.

சுகு :—ஆனால் தோழிமேல் காதல் போனதென்ன ?

பர :-அவர் தோழிமேல் ஆசைப்பட்டார் என்றது என்னுடைய கருத்தே யாகும். அப்புறந்தான் உண்மை தெரிந்தது.

சுகு :—பரதா, ஏன் வீணாகக் கதை வளர்த்துகிறாய் ? உண்மையை ஒளிக்காது சொல்.

பர :—அம்மணி, உண்மையைச் சொன்னால் உடம்பெரியுமோ என்றுதான் பயப்படுகின்றேன்.

சுகு :—உண்மை என்றும் வெற்றி பெறும். நீ ஏன் பயப்படுகின்றாய் ?

பர :—கோபம் கொள்ளாமலிருந்தால் சொல்லுகிறேன்.

சுகு :—இல்லை, சொல்லு.

பர :—அப்படியானால் அவருக்கு உங்கள்மேல்தான் ஆசை. இஃது உண்மை அம்மணி.

சுகு :—பரதா ! என்ன சொன்னாய் ! போ, இங்கிருந்து ; இனிமேல் என் முன் வராதே.

பர :—தங்கள் கட்டளைப்படிதானே சொன்னேன். அப்படி நடந்துகொண்டது தவறுதான். மன்னிக்கவேண்டும்.

(திரும்பி நடத்தல்)

சுகு :—பரதா, வா இங்கே, உன்னை மன்னித்தேன்.

பர :—அப்பா! உயிர் வந்தது.

சுகு :—இதோ பார். இப்பொழுதே சொல்லுகிறேன். யாரிடமாவது இதைச் சொன்னாயோ, உன் தலை தவறிப் போகும்.

பர :—அம்மணி, நான் ஏன் சொல்லப்போகிறேன். எனக்குத் தெரியாதா?

சுகு :—(உள்ளம் குலைந்து) ஆனால் மனோகரர் என் மேல் கொண்டுள்ள காதலை உன்னிடம் சொல்லி யிருக்கிறார் அல்லவா?

பர :—அம்மணி, இல்லை, அவர் என்னிடம் சொல்லவில்லை. அவர் தமது காதல் நெருப்பைத் தமது மனப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டித்தான் இருந்தார். நான்தான் அவர் இரும்பு மனத்தைத் திறந்து பார்த்தவன். நான் பார்த்துவிட்டேன் என்று தெரிந்தாரோ இல்லையோ, அவர் புழுவாகத் துடித்துவிட்டார். உம்மிடம் தமது காதலைத் தெரிவிக்கவே கூடாது என்று கேட்டுக் கொண்டதுண்டு. அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறித் தங்களிடம் தெரிவித்திருக்கிறேன்.

சுகு :—எனக்குத் தெரியும் அவரை. எப்பொழுதும்போலவே என்னிடம் அவர் நடந்துகொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். தவறி நடந்தால் துன்பந்தான் விளையும். அவரிடம் நான் கொண்டிருக்கும் மதிப்பையும் இழப்பார். என்னிடம் வருவதையும் இழந்துவிடுவார்.

பர :—தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்.

(கோமதி வருதல்)

கோ :—தேவிக்கு நன்மை யுண்டாகுக! நமது சேனைத் தலைவர் உங்களைப் பார்க்க வேண்டுமென்று அரண்மனைக்கு வந்தார். அழைத்து வந்திருக்கிறேன்.

சுகு :—நல்லது, நீ போய் அவரை இங்கே அனுப்பு.

(கோமதி போதல்)

பரதா, என் கட்டளை, நினைவிருக்கட்டும்.

பர :—அம்மணி, மறக்கமாட்டேன். (போதல்)

[மனோகரன் வருதல். வீரர் செய்யும் வணக்கங் காட்டி நிற்றல்]

சுகு :—வீரர் நாயகமே, வரவேண்டும்.

மனோ :—இளவரசியாருக்கு ஒரு விண்ணப்பம். மகாராணி சர்க்கார் தங்களிடம் அனுப்ப யான் வந்தேன். ஒன்றைக் குறித்துத் தங்களிடம் பேச வேண்டும் என்பது கட்டளை.

சுகு :—பேச வந்தது எது குறித்தோ?

மனோ :—தங்களை மணம் புரிய வந்திருக்கும் அரசிளங் குமாரர் இருவருள் எவரை நாயகராகத் தமது திருவுள்ளங் குறித்திருக்கிறது என்பதை அடியேன் தங்களிடமிருந்து அறிந்து போக வேண்டும்.

சுகு :—ஓ! அதுவா! என் அன்னையார் கூர்ந்த நோக்குடையவர். இதைக் குறித்துப் பேசத் தக்கவரையே துணிந்தனுப்பி யிருக்கிறார். தங்களுக்கு இந்தப் பெண் பேசும் வேலை மனம் இயைந்ததாகத்தான் இருக்கிறது போலும். மிகவும் விருப்பத்தோடுதான் இதை ஏற்றுக்கொண்டிருப்பீர்?

மனோ :—அம்மணி, கட்டளைக்கு அடங்கி நடப்பது என் கடமை; ஆகையால்தான் இதை ஒப்புக்கொண்டு வந்தேன். வேறு யாரையேனும் அனுப்புமாறு நான் வணங்கிக் கேட்டுக்கொண்டதுண்டு.

சுகு :—ஏன் மறுத்தீர்?

மனோ :—என் முயற்சி ஒருவேளை பயனடையாது போகுமோ என்றுதான்.

**சுகு** :—உம்மை மதித்து என் உள்ளத்தை வெளியிட மாட்டேன் என்று நினைத்தீரா? அல்லது இந்த அரச குமாரர்கள் வகையில் நீர் விரும்பியபடி நடந்துகொள்ள மாட்டேன் என்று நினைத்தீரா?

**மனோ** :—எனக்கு இந்தத் திருமணத்தைப்பற்றி யாதொரு பற்றும் இல்லை. தங்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைச் சொன்னாலே போதுமானது.

**சுகு** :—இந்த அரச குமாரர்களைப்பற்றி ஏதேனும் முடிவு சொல்ல வேண்டியது எனது கடமையே யாகும். அன்னையாரும் என் முடிவான பதிலை எதிர்பார்த்துச் சலித்துப்போ யிருக்கலாம். இந்த அரச குமாரர்களும், பாவம் வெகு நாளாகக் காத்திருக்கின்றனர். நீரும் வந்துவிட்டீர். உமக்காகவாவது ஏதேனும் ஒரு வழியாக முடிவு செய்யவேண்டும். நீர் கட்டாயப்படுத்தினால் என் உள்ளத்தை வெளியிடக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

**மனோ** :—கடமை யறிந்த தங்களைக் கட்டாயப்படுத்த வேண்டியதுமில்லை. கட்டாயப்படுத்த நினைக்கவும்மாட்டேன்.

**சுகு** :—என் உள்ளத்தை எப்படியாவது அறிந்து வர வேண்டுமென்பதுதானே, என் அன்னையாரது கட்டளை?

**மனோ** :—நான் முன்னமே சொல்லவில்லையா, இந்தக் காரியத்துக்கு நான் தகுதியானவனே இல்லை யென்று?

**சுகு** :—வீர சிம்மமே, உம்மை அறிவேன் நான். நீர் கூரிய அறிவுடையவர். ஊடுருவிப் பார்த்து உள்ளத்தைத் தெரிந்து கொள்ளும் இயல்புடையவர். இந்த அரசிளங் குமாரர்கள் என்னை விரும்பி எத்தனையோ எத்தனங்களைச் செய்திருக்கின்றனர். நீரும் பார்த்திருக்கின்றீர். இவர்களுள் யாரை நான் மணந்துகொள்ளுவது சரி? நீரே சொல்லும்.

மனோ :—அம்மணி, இதுவோ காதல் நாடகம். வேறொருவர் கருத்துப்படி நடக்குங் காரியமன்று. காதலர்களே கண்டுகொள்ள வேண்டுமல்லாது வேறில்லை.

சுகு :—யார் கட்சியில் நீர் இருக்கிறீர்? நான் யாரை மணந்து கொள்வதில் உமக்கு விருப்பம்?

மனோ :—நான் ஒருவர் கட்சியிலும் இல்லை. உமது உள்ளம் போனபடி உறுதி செய்து கொள்ளலாம்.

சுகு :—உமது கருத்தைக் கேட்கிறேன்.

மனோ :—இஃது ஆராய்ந்து சொல்ல வேண்டியதொன்று.

சுகு :—போகட்டும், இருவருள் யார் பொருத்தமானவர் என்றுவது உம்மால் சொல்ல முடியாதா?

மனோ :—இருவரும் பொருத்தமற்றவர் என்பதுதான் என் உள்ளக் கிடக்கை. உமது வனப்புக்குங் குணத்துக்கும் மண்ணுலகில் உள்ள மன்னரெவரும் பொருத்தமாக மாட்டார். இந்த நிலவுலக மக்கள் உம்மைத் தெய்வமாகக் கொண்டு வணங்கிக் கையெடுத்துக் கும்பிடத் தான் வேண்டும்.

சுகு :—அன்போடும் ஆதரவோடும் பேசினீர். இனி என்னைப் பற்றிக் கேட்கவில்லை. இவர்கள் இருவருள் நீர் யாரை மதிக்கிறீர்?

[குணங்கன் வருதல்]

குண :—தேவிக்கு நன்மை யுண்டாவதாக! அம்மணி, மகாராணி சர்க்கார் தங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

மனோ :—நல்ல சமயத்தில் வந்தாய். அம்மணி, மறுபடியும் வருகிறேன், உறுதி கூற வேண்டும்.

சுகு :—(போய்க்கொண்டே) நீரே உறுதி கூறிக்கொள்ளும்.

(குணங்கனும் சுகுமாரியும் ஒருபுறமாகப் போதல். மனோகரன் மற்றொருபுறமாகப் போதல்.) (திரை விழுதல்.)

## அங்கம் உ. களம் க

**இடம்** :—அரண்மனையில் ஓர் அறை

**நடர்** :—அஞ்சனுதேவி சுகுமாரி
விஜயசேகரன் உக்கிரசிம்மன்
மனோகரன் குணங்கன்
கனகராஜன்

விஜ :—பேரரசியே, யாங்கள் வந்த காரியம் ஒரு முடிவுங் காணுது வீண் காலப்போக்காகப் போனதைக் குறித்து மிகவும் வருந்துகின்றேன்.

உக் :—நாளென்றிருந்தது, மாதமாகி, இனி வருடமாகிக் கடைசியாக யுகமாகி முடியும்போ லிருக்கிறது. தங்கள் குமாரியின் உள்ளத்தை இன்னும் அறிய முடியாததன் காரணந்தான் புலப்படவே இல்லை.

அஞ் :—மனோகரரே, சுகுமாரியின் மனத்தை அறிந்தீரோ ?

மனோ :—ஆம் அம்மணி, அவர் மனம் நம்முடைய அரச குமாரர்களைப் பொறுத்தமட்டில் வேறுபாடின்றி இருப்பதைத் தெரிந்து வந்தேன்.

விஜ :—நீர் சொல்லுவது நன்ருக விளங்கவில்லையே ?

மனோ :—இளவரசியார் உங்கள் இருவரைப்பற்றியும் ஒரு விதமான முடிவுக்கும் வரவில்லை.

உக் :—ஏதேனும் ஒரு வழியாக முடிவு செய்யப்போவதாவது உண்டா ?

பர :—அல்லது இவர்களைப்பற்றி நினைவுகூட இல்லையா ?

அஞ் :—ஏதோ ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டியதல்லவோ முறை ? குணங்கா, நீ சென்று இளவரசியை யான் அழைத்ததாக அவளிடம் தெரிவி.

குண :—கட்டளைப்படி. (போதல்)

அஞ் :—அரசிளங் குமாரர்களே, உங்களைப்பற்றிய செய்தி தான் உண்மையில் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. யான் என் புதல்விக்குத் தன் நாயகனைத் தேர்ந்தெடுப்ப தில் முழுப் பொறுப்பைத் தந்திருப்பது உண்மைதான். ஆகையினாலேயே தன்னை மணம் புரிய வந்தவர்களை மதிக்காம விருப்பதென்றால், அது கண்டிக்கத் தக்க குற்றமேயாகும்.

(சுகுமாரி வருதல்.)

சுகு :—அன்னையே, என்னை அழைத்தீர்களாமே ?

அஞ் :—ஆம், இப்படி உட்கார். குழந்தாய் சுகுமாரி, இதைக் கேள். இந்த அரச குமாரர்கள் உன் பொருட்டாக இங்கு வந்து, எவ்வளவோ அரிய காரியங்களை மறந்து, உன்னிடம் அளவிலாத அன்புகாட்டி, ஆராத காதல் கொண்டிருக்கின்றனர்.

சுகு :—அன்னையீர், அதற்காக நான் அவர்களிடத்தில் என் றும் மாறாத நன்றி யறிதல் காட்டக் கடமைப்பட் டிருக் கிறேன்.

பர :—(தனியுரை) வேறென்ன வேண்டும், நன்றி காட்டி னால் போதாதோ ?

அஞ் :—நன்றி காட்டினால் போதாதம்மா, திருமணம் நடை பெறவேண்டும். இந்த அரசகுமாரர்கள் விஷயமாக உன் கருத்தை நாளைக்குள்ளாக என்னிடம் தெரிவிக்க வேண்டும்.

சுகு :—இந்த அரசகுமாரர்கள் செய்தி எனக்குப் பெருந் தொல்லையாக இருக்கின்றது. அம்மா ஒருவரைத் தள்ளி ஒருவரைக் கொள்ள எனக்குச் சிறிதும் மனமில்லை.

பர :—ஆம், அம்மணி ; தர்ம சங்கடந்தான். அவரை விட்டு இவரைத் திருமணம் செய்தால், அவருக்கு உயிர் போய்விடும். இவரைவிட்டு அவரைக் கலியாணம் செய்

தால், இவருக்கு உயிர் போய்விடும். திருமணம் செய்துகொள்ள வில்லையென்றால், உயிரை விட்டு விடுவதாக இவர்களே எத்தனையோமுறை சொல்லி இருக்கிறார்கள். இரண்டு பேரையும் வேண்டாமென்றால், இருவரும் இறந்துபோவார்களே !

விஜ :—பேரரசியே, இருவரையும் வேண்டாமென்பது மிகவும் கொடுமை, மிகவும் கொடுமை.

உக் :—என் கருத்தும் அதுவே. வேண்டா மென்பதற்குக் காரணமே இல்லையே.

சுகு :—அம்மா, எனக்கு ஒன்று தோன்றுகிறது. அதன்படி செய்யத் தாங்கள் மனம் வைக்கவேண்டும்.

அஞ் :—என்ன சொல், கேட்போம்.

சுகு :—நம்முடைய சேனாதிபதி நமது நன்மையையே விரும்புபவர். என் உள்ளத்தை அறியவும் கட்டளையிட்டிருக்கிறீர். அவரைக் கொண்டே இந்தச் சங்கடமான நிலைமையினின்றும் மீள உறுதி செய்திருக்கிறேன்.

அஞ் :—உள்ளம் மகிழ்ந்தேன். அவரே என் நம்பிக்கைக்கு உரியவர். அவரிடம் உன் உள்ளத்தை வெளிப்படுத்தினாலும் சரி ; இல்லை, அவர் விருப்பப்படியே நீ நடந்துகொண்டாலும் சரி. நாளைக்குள் ஒரு முடிவு சொல்ல வேண்டும். நீயும் அவருமாகச் சேர்ந்து என்ன முடிவுக்கு வருகிறீரோ அதை நான் என் உள்ளம் பூரிக்க ஒப்புக்கொள்ளுகிறேன். அவர் பேரறிஞர். பொறுமையறிந்தவர். நாட்டின் நலமே தமது நலமென்று இருப்பவர். என் உள்ளம் ஒப்பியது.

விஜ :—அதாவது, நாங்கள் உங்கள் மனோகரரை வணங்கி வாழ்த்திக்கொண்டிருக்கவேண்டும் போலும் ?

மனோ :—அரச குமாரரே, உமக்கு அவ்வளவு சிறுமை வர வேண்டாம். பேரரசியாருக்கு ஒரு விண்ணப்பம்.

இந்தச் செயலில் என்னை நுழைக்க வேண்டாமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

உக்:—ஏன் வேண்டாம்? அதற்கும் ஒரு காரணம் வேண்டுமே?

அஞ்:—ஆம், அதற்குத் தக்க காரணம் ஒன்று காட்டத்தான் வேண்டும். என் ஒரே அருமைப் புதல்வியின் உள்ளம் வருந்த நான் பொறுக்கமாட்டேன்.

விஜ:—மனோகரரே, எங்களுள் ஒருவரைத்தானே உறுதி செய்வீர்கள். உறுதி செய்தவருக்கும் உமக்கும் இனி மேல் வரப்போகும் ஒற்றுமையையும், நட்பையும், அன்பையும், ஆதரவையும் எண்ணிப்பாரும். மங்கல காரியமாயிற்றே, ஏன் வேண்டாமென்கிறீர்? மேலும் மகாராணி சர்க்காரின் கட்டளை.

மனோ:—பேரரசியே, அடியேனை மன்னிக்கவேண்டும். நான் கூறுவதை அருள்கூர்ந்து கேட்கவேண்டும். எனக்கோர் தோழர் உளர். அவர் இளவரசியாரின்மீது மட்டிலாக் காதல் கொண்டுள்ளார். இளவரசியார் தமக்குக் கிட்டாப் பொருள் என்று அவருக்கு உறுதியாகத் தெரியும். ஆதலால் இளவரசியார் திருமண மங்கல நாள் வரை தாம் உயிருடன் இருந்து அந்தத் திருவிழாவைப் பார்க்காமலே விண்ணுலகம்போக உறுதி செய்துவிட்டார். அதை இனி அவர் மாற்றார். இப்பொழுது நான் இந்த அரசகுமாரர்களுள் ஒருவரை மணமகனுக்குவேன் என்றால் என் உயிரனைய உத்தமத் தோழருயிரைப் போக்குவேன் என்பது உறுதி. நானே என் அன்பரைக் கொல்ல என் மனமார மறுக்கின்றேன்.

விஜ:—நீர் சொல்லுவதைப் பார்த்தால் நீர் குறிப்பிடும் நண்பரென்பவர் மனோகரராகவே இருக்கலாமோ?

மனோ:—மகாராணியார் முன்னிலையில் பேசத்தகும் வார்த்தையன்று இது. காரணமின்றி ஒருவன் பெயரைப் பழிக்குள்ளாக்குவது பிள்ளைத்தனம்.

அஞ்:—ஆம், மனோகரர் கூறியது சரியே.

கன:—மகாராணி சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம். அம்மன் கோவிலுக்குப் போய்த் தேவியின் அருளைக் கொண்டு இந்த மங்கல காரியத்தை எளிதில் முடிக்கலாமே. என் இஷ்ட தெய்வமாகிய காளிதேவி முன், இந்தச் சில நாட்களாக இளவரசியார் திருமணத்தை முன்னிட்டே தவங்கிடந்து வருகிறேன். விரைவில் அதுவும் முடிவுபெறும். கோவிலுக்குப் போவோம். அம்மனைக் கேட்போம். அவள் வாக்குப்படி நடந்து கொள்ளுவோம். தெய்வமே பார்த்து ஒருவரை விலக்கிவிட்டால், அவர் கோபங் கொள்ளவுமாட்டார். மனம் உடையவும் மாட்டார்.

பர:—(தனியுரை) இறந்துபோகவு மாட்டார்.

அஞ்:—சோதிடரே, நீர் சொல்லுவதும் ஒரு வகையில் பொருத்தமாகத்தா னிருக்கிறது.

விஜ:—எனக்கும் அப்படியே தோன்றுகின்றது.

உக்:—எனக்கும் அப்படியே.

சுகு:—தேவியின் வாக்குப்படி நடந்து கொள்ளுவதென்றால் எனக்கு விளங்கவில்லையே. நீர் இப்பொழுது காளிதேவியிடமிருந்து எதிர்பார்க்கும் உதவிதான் என்ன? என் தலையில் எழுதியதை மாற்றி வேறு விதமாகச் சொல்லுவாளா? அல்லது எழுதியபடியே சொல்லுவாளா?

கன:—எழுதியதைத்தான் சொல்லுவாள்.

சுகு:—தேவி சொல்லியபடி நாம் நடக்கத் தவறினாலோ?

கன:—கேட்பானேன்; துன்பமும் தொல்லையுமாகத்தான் முடியும்.

சுகு :—அப்படியானால் தேவி சொல்லுவதுபோல் நடவாம லும் இருக்கலாம்போல் இருக்கிறதே?

பர :—சோதிடரே, காளி தேவி, சொல்லுவதுபோல் சில சம யங்களில் நடக்கும், சில சமயங்களில் நடக்காது என்று தெரிகிறதே; இவ்வளவு சந்தேகமான நிலைமையில் கோவிலுக்குப் போய்க் குறி கேட்பதில் என்ன பயன் என்று கேட்கிறார்கள். அம்மணி, இந்தக் கேள்வி மிக வும் சிக்கலான கேள்வி.

கன :—இந்த விஷயம் அவ்வளவு எளிதாகப் பேசி முடிவு கட் டக் கூடியதன்று.

அஞ் :—மனோகரரே, உமது கருத்தென்ன?

மனோ :—அம்மணி, குறி கேட்டு மணம் முடிப்பதும் உண்டு, இல்லை யென்று சொல்ல முடியாது.

விஜ :—அப்படிச் சொல்லும். அம்மணி, அவருக்கும் அதிக நம்பிக்கை யிருக்கிறது. அதை நம்பாதவர் யாராவ துண்டோ?

மனோ :—ஆனால், எனக்கு அதில் நம்பிக்கையே இல்லை; அம் மணி, குறி சொல்லுவதைக் கூர்ந்து ஆராய்ந்தும் பார்த் தேன். எனக்கொன்றும் விளங்கவில்லை. ஒரு வேளை கூரிய அறிவாளிகளுக்கே அதன் உண்மை விளங் கும்போலிருக்கிறது.

உக் :—மகாராணி சர்க்காருக்கே நம்பிக்கை யிருக்கிறதாம். உமக்கும் இருந்தால் என்ன?

மனோ :—மகாராணி சர்க்காரும் மனோகரனும் ஒருவரல்லர் என்பதைத் தாம் அறியாதுபோன தென்ன?

அஞ் :—சரி, சோதிடர் சொன்னது போலக் கோவிலுக்குப் போவோம். தேவியின் வாக்கு என்ன என்பதைத் தெரிவோம், அதனால் ஒரு தவறும் இல்லை.

(திரை விழுதல்)

## அங்கம் ௨. களம் ௨

இடம் :—ஒரு தோட்டம்

நடர் :—கனகராஜன், தருமநாதன், கண்ணகி.

தருமநாதன்:—புறப்படும்போதே வலது கண் துடிச்சுது. இன்னைக்கு என்னமோ யோகம் இருக்கிறப்போலிருக்குது. எனக்கோ நல்ல காலம் இதுவரைக்கும் வந்ததில்லை. நல்லகாலம் இருந்தா இந்தக் கனகராஜ சோசியனிடம் நானேன் வேலைக்கு வந்துசேரப் போறேன். இந்த மனுஷனிடத்திலே வந்து மாசம் பத்தாச்சு. சம்பளமிண்ணு முழுசா இந்தக் கையிலே வாங்கியறியேன். அரையுங்காலும் ஒண்ணு ரெண்டுமா கொடுப்பாரே ஒழிய மாச மாச்சு காசு கைக்கு வந்ததிண்ணு இல்லை. அந்த ஆளுக்கும் பல பிடுங்கல். இப்போ ஏதோ நம்ம சோசியருக்குச் சுக்கிரதிசை சுத்தரது போல இருக்குது. வீட்டிலேயே தங்கறதில்லை. வண்டாப் பறக்குறுரு. சோழியன் குடுமி சும்மா ஆடுமா!

(கனகராஜன் வருதல்)

கன :—எங்கேயடா போயிருந்தாய், அசடே?

தரு :—எங்கே போறது எழவு? உம்மைத் தேடிட்டுத்தான் வந்தேன்.

கன :—நீ என் வந்தாய்? கண்ணகியை யல்லவா அனுப்பச் சொன்னேன்?

தரு :—வர்ரு, வர்ரு. அவசரப்பட்டா ஆகுமா? கோவிலிலே குறி சொல்லீட்டிருக்கிரு. சொல்லி முடிஞ்சுதும் வர்ரேண்ணு. அதிருக்கட்டும் உம்ம வீட்டுக்கு அந்த மாப்பிள்ளை ராஜா ரெண்டு பேரும் ஒருத்தர் மாத்தி

ஒருத்தர் வந்த மணியமா இருக்கிறுங்களே, என்ன சங்கதி?

கன :—தர்மா, அது வெகு ரகசியமான சங்கதி. இளவரசி கல்யாணம் இப்பொழுது என் கையிலேதான் இருக்கிறது, தெரியுமா?

தரு :—நீரா தாலிகட்டப்போகிறீர்?

கன :—அட, பைத்தியமே, நான்தான் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன்.

தரு :—நீரென்ன ஏற்பாடு செய்வது? அரமனையிலே ஆயிரம் பேர் இருக்கிறுங்கோ....................

கன :—இருந்தால் என்ன? நீ விவரம் தெரியாமல் பேசுகிறுய். மகாராணி தம் குமாரத்திக்குக் காளிதேவி குறி சொல்லுவதுபோலக் கலியாணம் செய்யத் தீர்மானித்து விட்டார். அந்தச் சங்கதிதான் உனக்குந் தெரியுமே. காளிதேவியா வந்து குறி சொல்லப் போகிறுள்? நம் கண்ணகி தேவிதானே குறி சொல்லவேண்டும். அவளைக் கொண்டு வகையாகக் குறிசொல்ல ஏற்பாடு செய்யப் போகிறேன். அரசகுமாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒத்தாசையாகக் குறிசொல்ல வேண்டுமென்று கெஞ்சுகிறுர்கள். அதற்குத்தான் அடிக்கடி வருகிறுர்கள்.

தரு :—நீர் யார் கட்சியில் இருக்கிறீர்?

கன :—இரண்டுபேரும் பணந் தருவதாகச் சொல்லி யிருக்கிறுர்கள். இரண்டு பேருக்கும் உதவி செய்வதாகச் சொல்லி யிருக்கிறேன். விஜயசேகரர் பணத்தை அள்ளி வீசுகிறுர். உக்கிரசிம்மர் கொஞ்சங் கையழுத்தக்காரப் பேர்வழி. (திரும்பிப் பார்த்து) அதோ கண்ணகி வருகிறுள். (கண்ணகி வருதல்)

வா, கண்ணகி, வா.

**கண்** :—'சோசியரய்யா வெகு அவசரமாக வரச்சொன்னார்' என்று சொன்னானே, தருமநாதன்?

**கன** :—ஆமாம்; அவசரம் என்றுதான் சொல்லி யனுப்பினேன். உன்னால் ஒரு காரியமாகவேண்டியிருக்கிறது. ஒரு முக்கியமான காரியம்.

**கண்** :—அஃது எப்படியோ இருக்கட்டும். சங்கதியைச் சொன்னாலல்லவா ஆகும் ஆகாதென்று சொல்லலாம்.

**கன** :—உன்னால் ஆகக் கூடியதுதான். அன்றைக்கு மகாராணி கொலுவில் ஒரு புதிய செய்தி நடந்தது. இளவரசியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று இரண்டு அரச குமாரர்கள் வந்திருக்கிறார்கள்; உனக்குத் தெரியுமே.

**கண்** :—சின்ன ராணிதான் ரெண்டு பேரையும் வேண்டாமென்று தள்ளிவிட்டாராமே?

**கன** :—தள்ளவில்லை, தள்ளவில்லை. இரண்டு பேரில் யாரைக் கலியாணம் செய்து கொள்ளுவதென்று தெரியவில்லை என்றுதான் சொன்னார்.

**கண்** :—அதற்கென்ன அர்த்தம்? சோதிடரே, சின்ன ராணிக்கு ரெண்டுபேர் மேலும் இஷ்டமில்லை. எப்படி வேண்டாமென்பது என்று இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். பெண்கள் சாமர்த்தியம் இது. நீர் என்ன கண்டீர்?

**கன** :—அது, எப்படியோ போகட்டும். எனக்கு ஒரு யோசனை பட்டது. காளி கோவிலுக்குப் போய்க் குறி கேட்டுக் காளி சொல்லுவதுபோலக் கலியாணம் செய்துவிடலாம் என்றேன். என் நல்ல வேளை, மகாராணியார் ஒப்புக்கொண்டார்கள்.

**கண்** :—ஒப்புக்கொண்டார்களா?

**தரு** :—ஒப்புக் கொள்ளாமல்? கனகராஜா கொக்கா?

கன :—உன்னால்தான் இனி எல்லாம் ஆக வேண்டியது. அழகாகக் குறி சொல்ல வேண்டும்.

கண் :—சோதிடரே, அழகாகக் குறிசொல்ல ஆட்சேபனை இல்லை. ஆனால் நீர் அடுக்காகப் பணம் தருவீரோ?

கன :—அதற்கென்ன?

கண் :—உம்முடைய சங்கதிதான் எனக்குத் தெரியுமே. காரியம் ஆகிற வரையில் காலைப் பிடிப்பீர். அப்புறம் நீர் யாரோ, நானாரோ.

கன :—இல்லை, இல்லை. இதோ இப்பொழுதே வாங்கிக் கொள். (பணந் தருதல்) போதுமா? இதோ உன் பங்கு. (தருமநாதனுக்குப் பணங் கொடுத்தல்)

கண் :—ஏது, வெகு தாராளமா யிருக்கிறதே. சரி, குறி எப்படிச் சொல்ல வேண்டும்?

கன :—கொஞ்சம் யோசனை பண்ணிச் சொல்லுகிறேன். வா, போகலாம். (மூவரும் போதல். திரை விழுதல்)

---

## அங்கம் ௨. களம் ௩.

இடம் :—ஒரு காடு—காளி கோவில்

நடர் :—குமரன், நாகன், பட்டிலிங்கம், சாமண்ணன், கண்ணகி, கனகராஜன், அஞ்சனாதேவி, மனோகரன், விஜயசேகரன், உக்கிரசிம்மன், பரதன், குணங்கன்.

[கோவில் முன்னர்ப் பசும் பந்தர். அம்மன் சிலைக்கு அருகில் குத்து விளக்கு முதலிய கருவிகள். உடுக்கை, பம்பை, சாட்டை, கொடுவாள் முதலியவைகளை நாகன் முதலியவர்கள் ஏந்தி நிற்கின்றனர். குமரன், பூசைக்குரிய பொருள்களை ஏந்தி வருகிறான். அவன் பின்னர்க் கண்ணகி வருகிறாள்]

கும :—கண்ணகி, உனக்கு இண்ணக்கி வேலே சரியாயிருக்கும். திருவிழாக் கடைசி நாள். ரொம்ப பேர் குறி கேக்க வருவாங்கோ, தைரியமாயிரு.

கண் :—அண்ணு, நீ பயப்படாதே. வெளியூரி லிருந்து வந்திருக்கும் அநேகம் பேர் இங்கே வரப்போகிறார்கள். அவர்கள் உளவு விசாரித்துத்தான் வந்திருக்கிறேன். நீ சொன்ன உள்ளூர்க்காரரும் வருவார்கள், வரட்டும் வரட்டும், சமயம் பார்த்து வேண்டியபடி யெல்லாஞ் சொல்லி விடுகிறேன். (கனகராஜன் வருதல்)

கன :—(கண்ணகியைக் கையசைத்துக் கூப்பிட்டுக்) கண்ணகி, மகாராணி வரப்போகிறார்கள். வருகிற சமயம் பார்த்துச் சொல்லுகிறேன். தயாராயிரு. (போதல்)

கண் :—(குமரனருகில் வந்து) அண்ணு, ஒரு வேளை ராஜாத்தியம்மா இங்கே வருவார்களாம்; கொஞ்சம் சுறுசுறுப்பாயிருங்கள்.

கும :—ராசாத்தியம்மாளா வர்றாங்கோ? என்ன ஆச்சரியமாயிருக்கிறது! அடே, எல்லாரும் வந்தாச்சா? இண்ணக்கி ராசாத்தியம்மாளே கோவிலுக்கு வர்றாங்களாம். தூங்கி வழியாதிங்கோ. படிச்ச பாட்டெல்லாம் இண்ணக்கிப் பாடுடுங்கோ.

(குமரன் தேங்கா யுடைத்துக் கற்பூரங் கொளுத்துதல். பூசாரிகள் உடுக்கை இசைத்துக்கொண்டு பாடுதல்)

பூசா :—மாயி மகமாயி மணிமந்த்ர சேகரியே
ஆயி உமையவளே ஆதிசிவன் தேவியரே
(உடுக்கை யிசைத்தல்)
மாரித்தாய் வல்லவியே மகராசி வாருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன் சகோதரியே ஆஸ்தான மாரிமுத்தே
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா.

(உடுக்கை யிசைத்தல். கண்ணகி மருள் கொண்டு உகைதல்.
பத்தர்கள் தேங்காய் பழத் தட்டுகளை ஏந்தி வருதல்)

கண்:—அனலாய் அளறுதடா ஆங்காரக் காரியடா
பெண்ணாய்ப்பிறந்தவடா பெருமையுடன்வாழ்ந்தவடா.

கும :—தாயே, உனக்கு என்ன வேணுஞ் சொல்லம்மா. குத்தங் குறையிருந்தா மன்னிக்கணுங், தாயே.

கண் :—மேலண்டை மூலையிலே வேங்கடப்பன் வந்திருப்பான்
கூப்பிடடா கூப்பிடடா கோப்பெனவே இத்தருணம்.

கும :—யாரையா, வெங்கடப்பன்? (வெங்கடப்பன் வருதல்)

வேங் :—நான் தான்.

கும :—இப்படி வா, தம்பி.

வேங் :—(அருகில் வந்து) தாயே ஒரு சங்கதியை நினைத்து வந்தேன். அது பலிக்குமோ பலிக்காதோ சொல்ல வேண்டும்.

கண் :—எதை நினைத்து நீ வந்தாய் என் மகனே நீ சொல்லு
பதையாமல் இத்தருணம் பாங்குடனே நீ சொல்லு.

வேங் :—தாயே, நான் இந்த வருஷம் பரீட்சைக்குப் போயிருக்கிறேன். பரீட்சை தேறுமோ தேறாதோ சொல்ல வேண்டும்.

கண் :—நல்லாப் படித்தால்தான் நானுதவி செய்வேனே
இல்லாது போனாலோ ஏனென்றுங் கேளேனே
வீதிசுற்றி நீ திரிந்தால் வெட்கக்கே டாகுமடா
ஆதிபரா பரியாள் அண்டித் துணைபுரியாள்
சோம்பித் திரிந்தாலே சொப்பனத்துந் தேறமாட்டாய்
தேம்பித் திரியவழி தேடாதே என்மகனே
தூங்குமூஞ்சிக் காரருக்குத் துணைசெய்யாள் மாரியம்மா
பாங்குப் பதமோடு படித்திடுவாய் என்மகனே.

வேங் :—(*தனி யுரை*) *அவனவன் வேலையை அவனவனே செய்துகொள்ள வேண்டும்போ லிருக்கிறது. இன்னொருவரை நம்பி ஒன்றும் ஆகாது. தெய்வமும் வேலை செய்தால் தான் கூலிதரும்போ லிருக்கிறது. சரி, போய்ப் படிக்கலாம். (வெங்கடப்பன் போதல். கனகராஜன் வருதல்)*

கன :—(*கண்ணகி யருகில் வந்து*) *மகாராணி வருகிறார்கள், பயப்படாதே. தைரியமாகச் சொல்லு. (போதல்)*

பூசா :— (*பாடுதல்*)

1. பச்சைப் பந்தல் போட்டுப் பாங்காத் தென்னங்குலை
பனங்குலை தோங்க விட்டு—என் அம்மா
பனங்குலை தோங்க விட்டு

2. பச்சை மஞ்சளரைச்சுப் பள்ளயம் பரப்பி வச்சுப்
பாக்கு வெற்றிலை வச்சு —என் அம்மா
பாக்கு வெற்றிலை வச்சு

3. ஆட்டுக் கடா வெட்டிப் போட்டுப் பொங்கலிட்டு
அம்மா பூசை போடுவோம்—எங்காளி
அம்மா பூசை போடுவோம்—எம்மாரி
அம்மா பூசை போடுவோம்.

(*வேறு*)

1. ஆயிமக மாயிமணி மந்திரசொ ரூபி
மா காளிமுத்து மாரி
ம னோன்மணி ஓங்காரி—எம்மை
ஆதரிக்க வேணுந்தாயே அம்மாபரஞ் சோதி

2. நீலிக பாலிதிரி சூலிமுத்து மாரி
ம கேஸ்வரிமா காளி
ம னோகரிஒய் யாரி—எங்கள்
நீள் துயரம் போக்கவேணும் நித்தியக்கல் யாணி

*(கனகராஜன் வழிகாட்ட அஞ்சனதேவி, மனோகரன், விஜய சேகரன், உக்கிரசிம்மன், பரதன், குணங்கன் வருதல்)*

3. வாலவய தானமக மாயிமாரித் தாயே
மங் காதமணி நீயே
வஞ் சவினைக்குத் தீயே—அம்மா
வஞ்சிவிளை யாடிவரு வாயேதுணை நீயே.

கண் :— *(பாடுதல்)*

அனலா யளறுதடா ஆங்காரக் காரியடா
ஆளவந்த காளியடா ஆணிமுத்து மாரியடா
எட்டாள தேசமெல்லாம் ஏந்தியர சாளுகின்ற
பட்டாள துரைமக்கள் பாங்குடனே இங்குவந்தார்.

கும :—*தாயே, ஆமா, எங்க ராஜாத்தியம்மா வந்திருக்கிறாங்கோ.*

கண் :— *(கட்ட பொம்மன் மெட்டு)*

1. வாருமம் மாவரங் கேளுமம் மாகுறி
பாருமம் மாநல்ல நேரமம்மா—குறி
பாருமம் மாநல்ல நேரமம்மா.

2. ஊரையா ளப்போகுங் காரிகை யாளேங்கள்
உத்தமி கல்யாணம் பேசவந்தீர்—எங்கள்
உத்தமி கல்யாணம் பேசவந்தீர்.

கன :—*ஆம், தாயே, எங்கள் சின்ன ராணி யம்மா கல்யாணப் பேச்சாகத்தான் வந்தோம். மங்களமாக வாழ வழி செய்ய வேண்டும், அம்மா.*

கண்: — *(ஷை மெட்டு)*

3. ஆணி லழகன் அருமைத் துரைராஜன்
ஆநந்த மாப்பிள்ளை தான்வருவான்—அம்மா

ஆநந்த மாப்பிள்ளை தான்வருவான்—மகளுக்
காநந்த மாப்பிள்ளை தான்வருவான்

4. கன்னிக்குக் கல்யாணம் கைம்மே லிருக்குது
கவலை வேண்டாம் மனங் துவள வேண்டாம்-அம்மா
கவலை வேண்டாம் மனங் துவள வேண்டாம்-ஆனால்

கும :—*தாயே, என்ன ஆனலிண்ணு தடை போட்டுட்டியே! கொஞ்சங் தெளிவாகச் சொல்லணுங் தாயே! ஆயிரங் காலத்துப் பயிர். நீ பக்கத் துணையிருந்து பாங்கு செய்யவேணும் அம்மா.* (நெடுக விழுந்து கும்பிடுதல்)

(பச்சை குத்துங்குற ஜாதியல்லோ மெட்டு)

கண் :—நிச்சய மாய் ஒரு வாரத்திலே ஒரு
ஆபத்திலே சிக்க நேரும் அம்மா
அச்சந்தரும் பெரிய ஆபத்தம்மா பெரிய
ராணிக்கம்மா வந்து சேருமம்மா.

கன :—*அம்மணி, தாயே, என் குலதெய்வமே! உன்னை நம்பினவர்கள் நாங்கள்; கைவிடக்கூடாது, கூடாது.* (நெடுக விழுந்து கும்பிடுதல்)

கண் :—நிச்சயமாய் ஒரு வாரத்திலே ஒரு
ஆபத்திலே சிக்க நேரும் அம்மா
அச்சங் தரும் பெரிய ஆபத்தம்மா பெரிய
ராணிக் கம்மா வந்து சேருமம்மா.

அந்தச் சமயத்திலே ஆணழகு வீரன்
அண்டி உயிர் காப்பான் வீந்தசுகு மாரன்
அந்த மனோகரனே—காரிகையின்
ஆசை மணவாளனே.

கும :—*அம்மணி, நீ இருக்கும்போது எங்களுக் கென்னம்மா குறைவு. மகாராணிக்கு ஏதோ ஓர் ஆபத்து இந்த*

ஒரு வாரத்துக் குள்ளாக வருமாம். அந்த ஆபத்தி லிருந்து ராணி யம்மாளைக் காப்பாற்ற யாரோ ஒருவர் அந்தச் சமயத்தில் வருவாராம். அவர்தாஞ் சின்ன ராஜாத்தி அம்மாளுக்கு மாப்பிள்ளையாகப் போருராம். அம்மணி, நீ இருக்கும்போது எங்களுக் கென்னம்மா குறைவு? நீ சொன்னபடி கல்யாணம் முடிஞ்சா உனக் கும் பொன்னுலே தேர் செய்து வைப்பாங்கோ மகாராணி.

பர:—(தனி யுரை) யார் சொத்து? யார் எடுத்துத் தானம் பண்ணுவது? பாருங்கள். கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைபோலிருக்கிறது.

அஞ்:—அரசகுமாரர்களே, தேவி சொன்னதைக் கேட்டீர் களா?

விஜ. உக்:—கேட்டோம். எங்களுக்குப் பூரண சம்மதம்.

கும:—(கற்பூர ஆராதனை செய்தல்; அஞ்சனுதேவி, விஜய சேக ரன் இவர்கள் தட்டில் காசு போடுதல்; தேங்காய் பழம் கொடுத்தல்) (திரை விழுதல்.)

---

## அங்கம் உ. களம் ச.

இடம்:—ஒரு தோட்டம்

நடர்:—கனகராஜன், தருமநாதன், பரதன்.

[கனகராஜனும் தருமநாதனும் பேசிக்கொண்டிருத்தல்]

தரு:—என்ன சோசியரய்யா, கண்ணகி குறி சொன்னுளே, அஃது என்ன குறி? தலையுமில்லை, வாலுமில்லை.

கன:—அடே, தற்குறி, உனக்கென்ன தெரியும்?

தரு:—என்னவோ மனோகரருக்குக் கல்யாணம் ஆகுமென்று சொன்னுளே, நீர் விஜயசேகரருக்கு அல்லவா ஏற்பாடு செய்யப் போகிறீர்?

கன :—அஃதெல்லாம் ஓர் ஏமாற்றம். அவள் சொன்ன மனோகரன் ஒருவன் பேரன்று. பொதுவாகச் சொன்னாள், அவ்வளவுதான்.

தரு :—அது போகட்டும்; மகாராணிக்கு ஓர் ஆபத்து வர வேணுமே. அஃது என்ன ஆபத்து? எப்படி வரும்? யார் வந்து காப்பாற்றுவார்?

கன :—அதுவா, சொல்லுவதைக் கேள். நம்முடைய மகா ராணி சர்க்கார் நாள் தவறாமல் மாலை வேளையில் உத்தி யான வனத்துக்கு உலாவப் போகிறார் அல்லவா? அது வுந் தனியாக.

தரு :—சரி, போகட்டும்.

கன:—இப்பொழுது நான் ஒரு தந்திரம் செய்யப் போகி றேன். ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த உத்தியான வனத்திலே நம்முடைய ஆட்கள் ஐந்தாறு பேர்வழிகள் காட்டு மிராண்டிகள்போல வேடம் போட்டுக்கொண்டு பதுங்கி யிருப்பார்கள். விஜய சேகரரும் ஒரு புறம் பதுங்கி யிருப்பார்.

தரு :—ஐயோ! அவருக்கு வந்த தலைவிதியைப் பார். அவருந் தானே காட்டு மிராண்டிபோல பட்டப் பகலிலே வேசம் போடுவார்?

கன :—இல்லை, இல்லை. அவர் சொந்த வேடத்திலேதான் இருப்பார். மகாராணியார் பக்கத்தில் வந்ததும் நம்மு டைய ஆட்கள் ராணியை வளைத்துக்கொண்டு கொல்லுவ தாகப் பயமுறுத்துவார்கள். விஜயசேகரர் அங்கு வந்து அவர்களை அடித்துத் துரத்துவார்.

தரு :—எதற்காக இவ்வளவு பாடு படவேணும்?

கன :—எதற்காகவா? ராணிக்கு ஓர் ஆபத்து வருமென்று குறி சொன்னாளல்லவா? ராணி உயிருக்கே இப் பொழுது ஆபத்து வந்தது. அந்த ஆபத்திலிருந்து

ராணியைக் காப்பாற்றுகின்றவருக்குச் சின்ன ராணியைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டு மென்று தானே காளி தேவி குறி சொன்னாள். இப்பொழுது ராணியைக் காப்பாற்றினது யார்? விஜயசேகரர்தானே; அவருக்குத்தானே சின்ன ராணியைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும்?

தரு :—அப்படியா! சரி, இது பலிக்குமென்று உமக்கு நம்பிக்கை இருக்கிறதா?

கன :—ஏன் பலிக்காது? பலிக்காவிட்டால் இந்த மீசையை எடுத்துவிடுவேன். வா, போகலாம்.

(இருவரும் போதல். பரதன் வருதல்)

பர :—அப்படியா சங்கதி! (கனகராஜன் போன முகமாகப் பார்த்து) ஓய் ஜோசியரே, போகிற வழியிலே ஒரு நல்ல அம்பட்டனைப் பார்த்து அந்த மீசையை மழுங்கச் சிரைத்து விடும். (வேறு முகந் திரும்பி) இப்பொழுது முதல் வேலை, இந்தச் சங்கதியை மனோகரரிடம் தெரிவித்து ராணிக்குத் தெரியாமல் துணை யிருக்கச் செய்ய வேண்டும். (போதல்; திரை விழுதல்)

---

## அங்கம் ந. களம் க.

இடம் :—அரண்மனையில் ஒரு தனியறை

நடர் :—சுகுமாரி, கோமதி, மனோகரன்.

[சுகுமாரி இருக்கையி லமர்ந்திருக்கிறாள்.]

சுகு :—தோழி கோமதி கூறியது உண்மையா யிருக்குமா? காளி கோவிலில் சொன்னகுறி உண்மையன்று, சூது மொழி என்றாளே. இந்த அரச குமாரர்களும் கனக ராஜனும் இவ்வளவு தைரியமாக மகாராணியை ஏமாற்ற

முன் வந்திருப்பார்களா? ஏன் இருக்காது? தெய்வத்தின் பெயரால் தோன்றும் கணக்கில்லாத கொடுமைகளில் இஃது ஒன்று. வஞ்சனை வகையால் என்னை மணங்கொள்ளத் துணிந்துவிட்டனர்......ஆகா! என் தலைவிதி இப்படியும் ஆமா!......மங்கையருக்கு மனமன்றோ கற்புடையது. மனம் விரும்பிய மணாளனை விட்டு மற்றொருவனை மணப்பதோ மங்கலப் பொருத்தம்? இல்லை, இல்லை. அது பொய்க் கோலம்........ (எழுந்து) ஆம், யாருக்காக என் வாழ்வை நான் தாழ்வு செய்ய வேண்டும். இந்த நிலையில்லாத, நிச்சயமில்லாத, நீர்மேற் குமிழி போன்ற வாழ்வில், மாறாத மனத்துன்பமோ என் தலை எழுத்து? மனோகரர் இல்லை யென்றால், இம் மண்ணுலகமும் எனக்கில்லை. மங்கையர் நெஞ்சம் மாசிலாத வைரம் என்பதை நான் நிலை நாட்டுவேன்.....மனமே, நீ மனோகரரை மணந்தாய், உன் வாழ்வு அந்தமட்டில்தான்........

(கோமதி வருதல்)

கோம :—அம்மணி, இதோ சேனாபதி வந்திருக்கிறார். தங்கள் பெயரைச் சொன்னேனோ இல்லையோ, உடனே புறப்பட்டுவிட்டார்.

சுகு :—சரி, அவரை அனுப்பிவிட்டு, நீ போ.

(கோமதி போதல். மனோகரன் வருதல்)

சுகு :—ஐயனே, வர வேண்டும் அமருங்கள்.

மனோ :—(அமர்ந்து) அம்மணி, தங்கள் அழைப்பை யான் எதிர்பார்க்கவே யில்லை. என்னை அழைத்தது எது பற்றியோ?

சுகு :—தங்களிடம் பேச வேண்டியவை எத்தனையோ உண்டு. எல்லாவற்றையும் பேசுவதென்றால் என் ஆயுட்காலம்

முழுவதுமே போதாது. ஆகையால் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். மனம் ஒன்றிக் கேட்க வேண்டும்.

மனோ :—அம்மணி, தங்களுக்கு என்ன சஞ்சலம் நேர்ந்தது? தங்களுக்குத் துக்கம் வராமற் பாதுகாப்பதும், வந்த துக்கத்தை அழித்துக் கெடுப்பதும் அல்லவோ என் கடன் ஆகும். சொல்லுங்கள், என்ன நேர்ந்தது?

சுகு :—ஆம், ஆம், ஐயனே! என்னைக் காப்பாற்றவே தான் நீர் உருக்கொண்டீர். ஆனால் அந்தப் பெரும் பாரம் உமக்கு நெடுநாள் இராது. என் உள்ளமும் செவியும் உமது உள்ளத்தில் இருக்கும் ஓர் உண்மையை அறிய விரும்புகின்றன.

மனோ :—கட்டளைக்குக் காத்திருக்கிறேன்.

சுகு :—ஒளியாமற் சொல்லும். என்மேல் நீர் காதலன்பு கொண்டிருப்பது உண்மை தானோ?

மனோ :—(திடுக்கிட்டெழுந்து) அம்மணி, நானா!

சுகு :—ஐயனே, போதும். இன்னும் இந்த மறைவு வேண்டாம்.

மனோ :—புழுவினும் கடையேன், புல்லினுஞ் சிறியேன் நான் இதைப்பற்றி எவ்வளவு துணிவோடு பேசுவேன்! இந்த இரண்டு வருட காலமாக என் உள்ளம் தமது திருவுருவை எனது விருப்பிற்கிணங்கிய தெய்வமாக்கிப் பக்தி புரிந்து பரிந்து புகழ்ந்து பணிந்து வருவதை இறைவன் ஒருவனே அறிவான்.

சுகு :—பரம பக்தரே, என் உள்ளங் குளிர்ந்தது. கற்றலிற் கேட்டலே நன்றுதான். செவிக் குணவாகத் தேனும் பாலும் கிடைத்தன. அவற்றை அவை உண்டு களித்தன. இனி என் எண்ணம்போல் நடப்பேன். ஐயனே, என் உள்ளம் இப்பொழுதிருக்கு நிலைமையை

அறிவீரோ? என் அன்னை தந்த சுயம்வர வரத்தைச் சிறுபிள்ளைத் தனமாக இழந்து போனேன். என் மனது கனிந்த நாயகரை நானே தெரிந்துகொள்ள இடங் கொடுத்திருந்தார். அந்த உரிமையை நான் இழந்தேன், இழந்தேன்.

மனோ:—பேரரசியார் உமது உறுதியான முடிவுரைக்காகப் பல நாள் காத்திருந்தார். கணக்கின்றிக் காலங் கழிவதைக்கண்டுதானே காளிகோவிலைக் கருத நேர்ந்தது?

சுகு:—தேவி ஏவிய நாயகனை யன்றோ நான் இனி ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது எனக்குச் சுதந்தரம் இருந்தால் என் கருத்தைக் கவர்ந்த காவலரை, என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமரை என் இருகையாலும் ஏற்றுக் கொள்வேனே. இப்பொழுது என் நிலைமையைப் பாரும். காற்றுள்ள போழ்தே தூற்றிக் கொள்ளாது, கலங்கித் தவிக்கக் காலம் வந்து விட்டதே. உம்மைவிட்டு வேறொருவரை மணந்தால் என் உள்ளந் துக்கம் நிறைந்த கருங்கடல்போல் கொந்தளிக்கும். என் மனோ வல்லவரே, ஆம், நீரே எனது மனத்தை ஆண்டவர்; இதைத் தெரிவிக்கத்தான் அடியாள் தங்களை யழைத்தது.

மனோ:—அம்மணி, உமது உள்ளங் கற்புடையது. களங்கமற்றது. பால்போலுந் தூயது. தாய் போலுங் கருணை நிரம்பியது. அடியேனைப் பெருமை செய்தீர். என் எண்ணப்படி நடவாது என்று முன்னரே யான் அறிவேன். நீர் எட்டாக் கனியெனத் திட்டமாகத் தெரிவேன். என் வாழ்வு வெகு விரைவில் முற்றுப் பெறுமென்று அறிந்துள்ளேன். இறப்பதற்காக நான் துக்கப்படவில்லை. இந்த நிலைமையில் இறப்பதே எனக்குப் பேரின்பம். என் மனம் வணங்கிய ராணியை

எண்ணி உயிர் விடுவதே எனக்குப் பேரானந்தம். குணவதி! எனக்கு மரணந்தான் மணக்கோலம். புனிதவதியே, அடியேனுக்கு விடைகொடும். போவதற்கு முன் யான் முழந்தாளிட்டு முடிவணங்கி இரந்து கேட்பது இரண்டு வரங்கள். (முழந்தாளிடுதல்) உமது திருமண மங்கல காரியம் என் உயிரை எமனுலகுக்கு அனுப்பிவிடும். அது வரையில் தேவியின் சந்நிதானத்துக்கு வரப்போக மனம் பொறுக்கவேண்டும். இது ஒன்று. மற்றொன்று, உமது மாசில்லாத மங்கல வாழ்க்கையில் புழுவினுஞ் சிறிய இப்புல்லியோனை மறந்துவிடக் கூடாது.

சுகு:—கட்டழகரே, ஏன் என்னைக் கொல்லாமற் கொல்லுகிறீர்? நான் பெண், பலமில்லாதவள்; வீரசிங்கமாகிய நீர் அடியாளை வதைக்க வேண்டாம். இப்பொழுதே என் ஆவி இவ்வுடலைவிட்டுப் போய்விடும். ஆ! என் உடல் நடுங்குகின்றது.

(மனோகரன்மேல் சாய்ந்து மூர்ச்சித்தல்)

மனோ:—ஐயோ, என்ன இது! சுகுமாரி, சுகுமாரி.........

(திரை விழுதல்)

---

## அங்கம் ௩. களம் ௨.

**இடம்**:—அரண்மனையில் ஒரு தனியறை.

**நடர்**:—சுகுமாரி, கோமதி.

(சுகுமாரி மனோகரனை எண்ணிப் பாடிக்கொண்டிருத்தல்)

சுகு:—என் கதி எப்படியோ இருக்கட்டும். என் அன்னைக்கு ஏதோ ஆபத்து வரும் என்று குறிசொல்லியதை நினைத்தால் என் உள்ளந் திகைக்கின்றது. ஏதோ ஒரு

சூழ்ச்சி என்னை முன்னிட்டு முளைத்திருக்கிறது. பெற்ற தாய்க்குப் பெரிய துன்பம் வருவதைத் தெரிந்தும் அதை விலக்கும் வழியறியாது திகைக்கவேண்டி யிருக்கிறதே. என் அன்னையை விட்டு அகலாது உடனிருந்து உதவி செய்வதே எனது கடமை. (கோமதி வருதல்)

**கோம :**—தேவிக்கு மங்கலமுண்டாகுக. மகாராணியார் இன்று உத்யான வனத்துக்குப் போகவில்லையாம். பூஞ்சோலையைப் பார்த்துவரப் போயிருக்கிறார். உம்மிடம் இதைத் தெரிவிக்குமாறு கட்டளையிட்டனர்.

**சுகு :**—யாரேனும் உடன் சென்றார்களா?

**கோம :**—ஒருவரும் போகவில்லை.

**சுகு :**—பரதன், மனோகரர் எங்கிருக்கின்றனர்?

**கோம :**—அவர்களை நான் பார்க்கவில்லை.

**சுகு :**—சரி, நான் பூஞ்சோலைக்குச் செல்லுகிறேன். மகாராணியார் அரண்மனைக்கு வந்ததும் வந்து தெரிவி.

**காம :**—கட்டளைப்படி. (போதல். திரை விழுதல்)

---

## அங்கம் ௩. களம் ௩.

இடம் :—ஒரு பூஞ்சோலை.

**நடர் :**—சுகுமாரி, பரதன், அஞ்சனாதேவி, மனோகரன், விஜயசேகரன், உக்கிரசிம்மன், குணங்கன்.

[பரதன் ஓடிவந்து அங்கும் இங்கும் சென்று தேடுதல்]

**பர :**—எங்கே இளவரசியைக் காணவில்லை! (தேடுதல்) இங்கிருப்பதாகக் கோமதி சொன்னாளே! இளவரசிக்குக் கலியாணம் வந்திருக்கிறது! அந்த மங்களச் செய்தியை நானல்லவா முதலில் தெரிவிக்கப் போகிறேன்! ஆளையே காணவில்லையே! (தூரமாகப் பார்த்து) அதோ

வருகிறார். (சுகுமாரி விசனத்துடன் வருதல்) அம்மணி, மங்கல காரியம்! கல்யாணம்; கல்யாணம்! தேவதை தங்களுக்கு மணமகனைத் தீர்மானித்துவிட்டது.

சுகு:—பரதா, என் மனம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. என்னைத் தனியே விட்டுவிட்டுப் போ.

பர:—அம்மணி, மன்னிக்கவேண்டும். நீங்கள் ஆசைப்பட்ட நாயகர் கிடைத்த மகிழ்ச்சிச் செய்தியை முதல் முதல் உங்களுக்குத் தெரிவிக்கும் பேறு எனக்குக் கிடைத்த தாக எண்ணி, ஓடிவந்தேன். அம்மணி, மன்னிக்கவும். போய் வருகிறேன். (போதல்)

சுகு:—பரதா, போகாதே; வா, இங்கே.

பர:—அம்மணி, நான் வந்தது தப்புத்தான். ஒருவர் தூக்கத் தைக் கெடுப்பதும், ஒருவர் துக்கத்தைக் கெடுப்பதும் கொடிய செயல். அம்மா, நீங்கள் நன்றாகத் துக்கப் பட்டுக்கொண்டிருங்கள். நான் கெடுக்கமாட்டேன். (திரும்பிப் போதல்)

சுகு:—போகாதே பரதா, போகாதே நில்; வா, இங்கே. என்ன சொல்ல வந்தாய்?

பர:—தலைவியே, ஒன்றுமில்லை. நான் ஓர் அவசரக் குடுக்கை. யாருக்கு, எதை, எப்போது சொல்ல வேண்டுமென்று தெரிவதே இல்லை.

சுகு:—நீ வெகு பொல்லாதவன்.

பர:—தாங்கள் ஏதோ கோபமாயிருக்கிறீர். இன்னுமொரு சமயம் வருகிறேன்.

சுகு:—வீண் காலம் போக்காதே. எதைச் சொல்ல வந் தாய்?

பர:—ஒன்று மில்லை......இந்த மனோகரரைப்பற்றி ஒரு செய்தி; அது சொல்லத் தக்கதாயும் இல்லை. உங்கள் துக்கத்தைக் கெடுக்கத் தைரியமும் இல்லை. இன்னொரு

சமயம் வந்து சொல்லுகிறேன். தாங்கள் இப்போது கோபமா யிருக்கிறீர்கள்.

சுகு:—என்னை வாதிக்காதே. நான் இப்பொழுதே அதை அறிய வேண்டும்.

பர:—அம்மணி, ஒரு காரியம் நடந்தது. அது என்ன என்று கேட்டால்,......ஒன்றுமில்லை, அது, ஒரு சாதாரண காரியம். அப்படி நடக்குமென்று யாரும் எதிர்பார்க்கவும் இல்லை.........

சுகு:—ஏன் நிறுத்திக் கொண்டாய்? சீக்கிரம் சொல்லுவது தானே?

பர:—அம்மணி, நடந்ததைச் சொல்லி உங்கள் துக்கத்தைத் கெடுத்துவிட்டால் என்னைத் தொலைத்துவிடுவீர்களே.

சுகு:—ஆகா, நீ எவ்வளவு கல்நெஞ்சன். பரதா, சொல்ல மாட்டாயா?

பர:—கொஞ்ச நேரத்துக்கு முன்னால் மகாராணி சர்க்கார் பூஞ்சோலை வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். பக்கத்துக் காட்டிலே வேடர்கள் பன்றி வேட்டையில் இருந்தார்கள். அவர்களுக்குத் தப்பி ஒரு கடுவன் பன்றி மகாராணிக்குக் குறுக்கே ஓடி வந்தது. அவர் தம்முடைய உடைவாளையுருவிப் பன்றியின்மேல் வீசினார். அது ராணியார் மேல் பாய்ந்துவிட்டது.

சுகு:—என்ன! என்ன!

பர:—ஒன்று மில்லை, அம்மணி. மகாராணியார்மேல் பாய்ந்தது, அவ்வளவுதான். கூடப்போயிருந்த நானும் இன்னும் ஒரு தைரியசாலியும் எங்கள் உயிர் போய் விடாதபடி எங்கள் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு கூவினோம். தெய்வாதீனமாக மனோகார் அங்கு வந்து அந்தப் பன்றியைக் கொன்று ராணியைக் காப்பாற்றினார்.

சுகு :—உண்மையா, பரதா?

பர :—என் கதை உங்களுக்குப் பொய்போல இருக்கிறது. அவ்வளவோடு நிறுத்திவிட்டேன், அம்மணி.

சுகு :—நிறுத்தாதே. யார் பொய் யென்று சொன்னது? சீக்கிரம் முடி, பரதா.

பர :—அப்படியானால், கடைசி அத்தியாயத்தையே சொல்லி விடுகிறேன். மனோகரர் பன்றியைக் கொன்றாரோ இல்லையோ, மகாராணி சர்க்கார் மனோகரரைப்பார்த்து, "நீரே பாக்கியசாலி, நீரே என் புதல்வியின் மனோ வல்லவர். நீரே தேவதை குறித்த மணவாளர்" என்று கூவினார். நான் அதைக் கேட்டதும் திரும்பிக்கூடப் பார்க்காமல் இங்கு ஓடிவந்தேன். கதை முற்றிற்று. சுபம். சுபம். சுபம். மங்களம்!

சுகு :—பரதா, மனோகரர் என் அன்னை மகாராணி சர்க்காரைக் காப்பாற்றினார். நீ என்னைக் காப்பாற்றினாய். இதோ இந்த முத்து மாலை. இஃது உனக்கு.

பர :—மகா பாக்கியம், அம்மணி. (குணங்கன் வருதல்)

சுகு :—குணங்கா, என்ன விசேஷம்?

குண :—அம்மணி, மகாராணி சர்க்கார், தாங்கள் இங்கு இருக்கிறீர்களா என்று பார்த்துவரச் சொன்னார்.

சுகு :—மகாராணி சர்க்கார் எங்கே இருக்கிறார்?

குண :—அவர் பூஞ்சோலையில் இருக்கிறார். இங்கே வந்திருக்கும் அரச குமாரர்கள், இளவரசியாரைக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று கனகராஜ ஜோசியர் தங்களிடமிருந்து பெருவாரியாகப் பணத்தை வாங்கிக் கொண்டு ஏமாற்றிவிட்டதாக அவரை இடுப்பொடிய அடித்துவிட்டார்களாம். ஊர்க்குடிகளும் சோதிடரை அவமானப்படுத்தி அவர் வீட்டைக்கூடக் கொளுத்தி விட்டார்களாம். நான் வரும்பொழுது மகாராணி

சர்க்கார் அரசகுமாரர்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

பர :—உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த பாவியை உயிரோடு விட்டார்களே, அவன் நல்ல காலம்.

குண :—நம் இளவரசியாரையும், மனோகரரையும் வாழ்த்திக் கொண்டாடுவதற்கு நம் ஊர்க்குடிகள் அரண்மனை வாசலில் தேர்க் கூட்டம்போல் கூடியிருக்கிறார்கள். நான் போகிறேன். (போதல்)

பர :—இதோ மகாராணி சர்க்கார் வருகின்றனர்.

(அஞ்சனாதேவி, மனோகரர், விஜயசேகரன், உக்கிரசிம்மன், குணங்கன் வருதல்)

அஞ் :—குழந்தாய் சுகுமாரி, நான் சொல்லவந்த மங்கலச் செய்தி, உனக்கு முன்னமே தெரிந்துவிட்டதோ? பரதன் கழுத்தில் முத்துமாலை ஏறியபோதே உண்மை தெரிகிறது. தேவியே பார்த்து உனக்கொரு நாயகனைத் தேடிக் கொடுத்திருக்கிறாள். உனக்கு இதில் பூரண சம்மதம் உண்டு என்று இந்த முத்து மாலையே சொல்லுகின்றது.

விஜ :—மகாராணியாருடைய உள்ளெண்ணம் இப்பொழுது தான் தெரிகிறது. தங்களுக்கு இந்த விதமாக உறவு கொள்வதில் பூரண சம்மத மிருக்கிறதுபோல் இருக்கிறதே.

உக் :—மகாராணி சர்க்காருக்கு இப்படி முடிய வேண்டுமென்றுதான் தொடக்கத்திலிருந்தே இருந்திருக்க வேண்டும் என்பது இப்பொழுதுதான் தெரிகிறது.

அஞ் :—புண்பட்டார் நெஞ்சம்போல் புகலுவது அழகன்று. காளிதேவி கூறிய வாக்கின்படிதானே நடந்தது. எனக்கு ஓர் இடையூறு வந்தது. என் புதல்விக்கு

ஒரு மணவாளரும் வந்தார். நாம் எல்லோரும் ஒப்புக் கொண்டபடி இனி நடக்கவேண்டியது தானே?

விஜ:—ஒப்புக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது? மனோகரரே, உமது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

உக்:—அதிர்ஷ்டம் வந்தாலும் இப்படித்தான் வரவேண்டும்.

மனோ:—ஐயன்மீர், அதிர்ஷ்ட மென்பதை யான் ஒப்புக் கொண்டேன். ஆயினும் இதில் ஓர் உண்மையுண்டு. கடுந் தவம் புரிந்து கைக்கெட்டிய கரும்பயனைத்தான் நீங்கள் அதிர்ஷ்டம் என்கிறீர்கள். நாங்கள் முன்னமே எண்ணிய எண்ணமும், காளிதேவியல்ல, கண்ணகிதேவி சொன்ன குறியும் ஒத்துக் கொண்டதுதான் அதிர்ஷ்டம். என்னுடைய உள்ளமும் இந்தக் கற்புச் சித்திரத்தின் உள்ளமும் முன்பிருந்தே ஒற்றுமைப்பட்டிருந்தது ஒருவருக்கும் தெரியாது.

பர:—இந்தப் பரதனுக்குமட்டும் தெரியும். அதற்கு இளவரசியார்தாம் சாட்சி.

அஞ்:—சுகுமாரி, உண்மைதானா?

சுகு:—அன்னையீர், இவன் உளவறிந்த கள்ளன். எல்லாம் இவனுக்குத் தெரியும். இந்த வெற்றிவீரர் வெகு மறைவாகப் பூட்டி வைத்திருந்த கள்ளக் காதலைக் காட்டிக் கொடுத்த கயவனும் இவனே. என் உள்ளம் மகிழ, என் வாழ்வு விளங்க, என் உயிரைக் காக்கக் கங்கணங் கட்டிக்கொண்ட கள்வனும் இவனே.

அஞ்:—ஆனால் நாம் எல்லோரும் ஒரு நாடகத்தைத்தான் இதுவரையிலும் நடித்து வந்திருக்கிறோம்.

பர:—சந்தேகமேயில்லை. அதுவும் 'சுகுமாரி' நாடகம்.

அஞ்:—ஆனால் நமது நாடகத்தை மங்கலமாக முடித்து விடுவோம். இராஜ குமாரர்களே, நன்னாட் பெருக்கம் இன்று வெகு பொருத்தமா யிருக்கிறது. உங்களது

அன்பையும் ஆசீர்வாதத்தையும் எதிர்பார்த்து, இறைவனது திருவருளை முன்னிட்டுத் திருமணத்தை மங்கலமாக நடத்திவிடுவோம். (கோமதி ஒரு தட்டில் பூமாலைகள் கொணர்தல்) இந்த மலர் மாலைகளை நீங்களே மணமக்கள் கையில் கொடுங்கள்.

விஜ :—(ஒரு மாலையை யெடுத்து மனோகரன் கையில் கொடுத்தல்)

உக் :—(ஒரு மாலையை யெடுத்துச் சுகுமாரி கையில் கொடுத்தல்)

மனோ :—(சுகுமாரியைப் பார்த்து) மங்கையர்க் கரசியே, மாசிலா மாணிக்கமே, என் உள்ளந் துள்ளிக் களிப்பதைப்போல் உன் உள்ளமும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். அவர் திருமுன் யான் உனக்கு வாக்களிப்பது இது :

"இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தோ டேன்"

இது, உறுதி. (சுகுமாரி கழுத்தில் மாலை யணிதல்)

சுகு :—என் உள்ளக் கோவிலில் உருக்கொண்ட உரை கடந்த உத்தமரே, தங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக நான் பெற்ற பேறு, என் தவப் பயனே ஆகும். இனி என்

"உள்ளமும் நாவும் என்றன் உடலமும் என்றும் உன்றன்
தள்ளரும் பணிகேட் டிந்தத் தரணியை விளங்கச் செய்வேன்"

உயிர் ஒன்றும் உடல் இரண்டுமா யிருப்போம்.

(மனோகரன் கழுத்தில் மாலை யணிதல்)

எல்லோரும் :—மனோகரர் வாழி! சுகுமாரி வாழி! மகாராணியார் வாழி! இறைவன் இன்னருள் என்றும் வாழி!

— மங்களம் —

4084

The Jupiter Press, Madras.

4084

# SUKUMARI

BY

Mr. S. AYYASWAMI PILLAI

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
- PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., -
6, Coral Merchant St., :: MADRAS.

**Pri:: As. 6**